உ

வேலுமயிலுந்துணை

திருத்தணிகைத்

# தலபுராண வசனம்.

இஃது

திருத்தணிகையின் மகிமையை அன்பர்கள் பலரும்

எளிதில் அறிந்துணருமாறு,

துரைத்தனபாடசாலை

மேலவிசாரணை கர்த்தராயிருந்த

நெல்வேலி

## முருகேசமுதலியாரால்

இயற்றப்பட்டு,

சென்னை

மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நந்தன௵.

1893.

Registered Copy-right

வேலுமயிலுமுதுணை

# பாயிரம்.

ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திருத்தணிகை ஸ்தலபுராணம் செய்யுள் நடையில் இயற்றப்பட்டு இருத்தலின் அதுகற்றோர்க்கன்றி மற்றோர்க்கு எளிதில் புலப்படுகிறதில்லை, ஆதலின் அத்தலபுராணத்தைப் பலரும் சுலபத்தில் உய்த்துணரும் பொருட்டு ஷை தணிகைத்தல புராணத்தையும், இத்தலத்தைப்பற்றி முன்னோர்கள் சமஸ்கிருதம், தெலுங்கு, பாஷைகளில் இயற்றியிருக்கும் நூல்களையும் ஆராய்ந்துணர்ந்து கூடியவரையில் சுருக்கமாகவும், தெளிவாகவும், கடினசந்தியின்றி எளிய நடையில் வசனரூபமாக எழுதியிருக்கின்றன. இதில் தலத்தின் பெயர்களும், அப்பெயர்வந்த காரணங்களும், அதிலுள்ள சிவலிங்கங்களும், தீர்த்தங்களும், அத்தீர்த்தத்தில் இன்னின்னகாலத்தில் மூழ்கினால் இன்னின்ன பலனைத்தருமென்பதும், இன்னினார் இன்னின்னபேறு பெற்றனரென்பதும், வள்ளியம்மன், தெய்வயானையம்மன், திருக்கலியாணங்களும், விஜயராகவசுவாமி வீரட்டகாஸேஸ்வரர்களுடைய வரலாறுகளும, தலமான்மியமும், ஸ்ரீசுப்

பிரமணியசுவாமிகளின அடியாாகள் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களும, இங்கு நடத்தப்படும உற்சவாதிகளும், ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகளின் ஸ்தானம், உருவம், ஆயுதம் முதலியவற்றின் இரகசியாாத்தமும ஆகிய இவைகள் அடங்கி யிருக்கின்றன.

நெ. மு.

உ

ஸ்ரீசுப்பிரமணியர்துணை.

# விடய அகராதி.


| | விடயம். | பக்கம். |
|---|---|---|
| 1 | அகஸ்தியதீர்த்த அகஸ்தீஸ்வரருற்பத்தி...... | 24 |
| 2 | ஆறுமுகசுவாமிகளவரலாறு... ... ... ... | 9 |
| 3 | இந்திரதீர்த்தஇந்திரேஸ்வரருற்பத்தி... ... | 28 |
| 4 | இரகசியார்த்தம... ... ... ... ... ... | 67 |
| 5 | இராமதீர்த்தஇராமேஸ்வரருற்பத்தி ... ... | 39 |
| 6 | கந்தவிரதங்கள்... ... ... ... ... ... | 64 |
| 7 | குமாரதீர்த்தகுமாரேஸ்வரருற்பத்தி ... ... | 18 |
| 8 | சங்கிநிஐராவதம்திருமபியிருத்தலினகாரண. | 32 |
| 9 | சப்தரிஷிதீர்த்தசபதரிஷீஸ்வரருற்பத்தி ... | 43 |
| 10 | சரஸ்வதிதீர்த்தசரஸ்வதீஸ்வரருற்பததி ... | 16 |
| 11 | சுப்பிரமணியக்கடவுள்வரலாறு... ... ... | 13 |
| 12 | சேஷதீர்த்தசேஷேஸ்வரருற்பத்தி ... ... | 37 |
| 13 | தணிகைமகத்துவம ... ... ... ... ... | 54 |
| 14 | தலத்தின்பெயாகள்முதலிய... ... ... ... | 5 |
| 15 | தெய்வயானையம்மன்திருக்கலியாணம்... ... | 28 |
| 16 | ,, வரலாறு ... ... ... ... | 46 |
| 17 | நந்திநதிநந்திகுகையுற்பத்தி ... ... ... | 21 |
| 18 | நாரததீர்த்தநாரதேஸ்வரருற்பத்தி ... ... | 41 |
| 19 | பாயிரம் ... ... ... ... ... ... ... | 1 |
| 20 | பிரமதீர்த்தபிரமேஸ்வரருற்பத்தி ... ... | 13 |

21 வள்ளியம்மன்திருக்கலியாணம் ... ... ...46
22 ,, வரலாறு ... ... ... ...46
23 விஷ்ணுதீர்த்தவிஷ்ணேஸ்வரருற்பத்தி ...33
24 விஜயராகவசுவாமியுற்பத்தி... ... ... ...43
25 வீரட்டகாசேஸ்வரர்வரலாறு ... ... ... 9

விடய அகராதி சம்பூரணம்.

உ



வேலுமயிலுந்துணை.

## திருத்தணிகைத்

# தலபுராணவசனம்.

மோட்சததை அருளிச்செய்யும் அதிபதியாகிய ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளுக்கு பூலோகத்தில முன்னுள்ளபெரியோர் ஏற்படுத்திய மேன்மையானக்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளும் சிறந்தவை அறுபததினலாகும். அவ்வறுபத்தினுள்ளும் முக்கியமானவை எட்டுத்தல்மாகும். அவ்வெட்டினுள்ளும் நாலுவிசேஷித்தன. அவை ஸ்ரீஜெயந்தபுரம், ஸ்ரீகுமாராசலம், ஸ்ரீபூரணகிரி, ஸ்ரீசேஷாசலம், என்பவைகளாம்.

இந்தானங்களுள் சிறந்தது ஸ்ரீபூரணகிரியேயாம், அதுதான திருத்தணிகை என்பது

இம்மலை ஆறுசிகரங்களும பொருந்தி எல்லாச்செல்வங்களும மங்களகரங்களும கூடினதா யிருக்கின்றது இதில ஸ்ரீ சுபபிரமணியக்கடவுள ஒருதிருமுகத்துடனும, இரண்டு திருக்கரங்களுடனும, நினற திருக்கோலமாக, ஒருகையை இடையில்வைத்து, மறறொருகையில ஞானசத்தியைததாஙகி, கருணைவெள்ளம பொழிகினற கடைககணகளுடன வள்ளியமமன தெய்வயானையமமன, எனனும இரணடு தேவிமாா சமேதராய் வீறறிருககினறனா.

சுவாமிகள வீறறிருககும இமமலைக்கு வடக்கில பசசரிசிமலையென்று சொலலபபடும வெணணிற மலையும், தெற்கில பிணணுககுமலையென்று சொல்லபபடும, கருநிறமலையும இருக்கினறன. இந்தப் பிணணுக்குமலையில அனேக சிறியசுனைகளும்,வறறாத ஆற்றுகளும இருககின்றன. இவைகள ஒவ்வொன்றிற்கும ஒவவொருமகததுவஞ சொலகினறனா. இவைகளில் அனேக மகான்கள் வாசம் செய்கிறதாகக் கேளவி இம்மலைகளின் ஒவ்வோர்பக்கததில் ஒவவோா அதிசயமிருப்பதாகவும, அவை இக்கலியுகததில் துறவிகளுக்கே தோன்றுமெனறும் மகானகள் சொலலக்கேள்வி.

# தலவிசேடம்.

## இத்தலத்தின் பெயர்களும், அப்பெயர்வந்த காரணங்களும்.

திருத்தணிகை, தணிகைமலை, தணிகாசலம், செருத்தணி, ஸ்ரீசாந்திபுரி:— ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு சூரனுடனும், வேடருடனும் சண்டை செய்ததனால் உண்டாகியகோபம் மகாலட்சுமி சொரூபமாகிய இந்த மலைக்குவந்தபின் தணிந்தது; இக்காரணத்தால் இதற்கு இப்பெயர் அமைந்தன.

*ஸ்ரீபூரணகிரி :—தேவலோகத்து வளங்களை யெல்லாம் கொள்ளைகொண்டுபோன சூரனை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் சங்கரித்து, அவ்வளங்களை யெல்லாம் கொணர்ந்து இந்தமலையில் வெகுகாலம் சேர்த்துவைத் திருந்தகாரணத்தால் இப்பெயருண்டாயிற்று, அன்றி இத்தலத்தில் வசிப்பவர்களுக்குச் சகலவித நன்மையும் சொந்தமாதலால் இப்பெயர்வந்த தெனினும் அமையும்.

¶க்ஷணிகாசலம், கணிகாசலம் :—இதில் ஒருக்ஷணகாலம் அனபோடிருந்து தவம்புரிந்த பிரமதேவன்முதலியோர் விசேஷவரங்களையும் பெற்றகாரணத்தால் இப்பெயர்வந்தது.

†மூலாத்திரி :— சகலத்துக்கும் மூலமாகி உலக முழுவதும் படைத்தளித்தழிக்கும் முதல்வனாகிய

* செவ்வம்நிறைந்தமலை. ¶ க்ஷணமலை. † முதல்மலை.

சிவபெருமானே இத்தலத்தில் ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகளைத தனக்கு மூலமாகக்கொண்டு வணங்கியதிஞல் இப்பெயா கிடைத்தது. அன்றி அறம், பொருள், இன்பம், வீடு எனனும் நால்வகைப் பொருளேயும் அடைய இம்மலே மூலமாயிருத்தலின இபபெயர்கிடைத்த தெனினுமாம்.

§ கல்ஹாரகிரி, ஹல்லசாத்திரி :— சிலகாலத்துக்கு முன்வரையில் இந்தமலேயின ஓர் தீர்த்தத்தில் தினந்தோறும் காலே, உசசி, மாலேயென்னும் திரிகாலங்களிலும் மூன்று செங்கழுநீாப் புட்பங்கள் புஷ்பித்து வந்தமையால இமமலேக்கு இப்பெயர்கள இயைந்தன.

o கற்பஜித்து :— எந்த கற்பகாலததிலும இம்மலேக்கு அழிவில்லாமையால் இப்பெயர் வாய்த்தது.

‡ ஸ்கந்தகிரி, ஸ்கந்தபாவசும — ஸ்கந்தனெனப் பெயர்பெற்ற ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகள இப்பாவ தத்தில் வாசம்செய்வதனுல் இப்பெயர்களமைந்தன

+ பிரணவார்த்தமாநகரம :—கிரேதாயுகத்தில் பிரணவப் பொருளே சிவபெருமானுக்கு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் இந்தத்தலத்தில் உபதேசித்தமையால் இப்பெயரடைந்தது.

✻ இந்திரநகரி :—திரேதாயுகத்தில் தேவேந்திரன் இத்தலத்தில் நெடுங்காலம் வசித்து, அரியதவஞ்செ

---

§ செங்கழுநீர்ப்பூமலே. o கற்பகாலத்தை ஜெயித்தது. ‡ கந்தர்மலே. + பிரணவப்பொருளே அறிவித்த பெரியபட்டினம், ✻ தேவேந்திரனுடையபட்டினம்.

ய்து, அனேகவரங்களைப் பெற்றுகொண்ட படியால் இப்பெயா ஓன்றியது.

¶ நாரதப்பிரியம் :—துவாபரயுகததில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் நாரதருக்கு இந்சத்தலததில்வேண்டிய வரங்களளிக்க, அதனுல் அந்த நாரதமுனிவருக்கு அதிகபிரியம் உண்டானதால் இப்பெயர் கூடியது.

† அகோர கைவல்லியப்பிரதம் ;— கலியுகத்தில் இததலத்தில் கொஞ்சம தவஞ்செய்வோருக்கும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் சகலவித நன்மைகளையும், கொடுத்துகொண்டு வருவதால் இப்பெய ருரிய தாயிற்று.

இவைகளேயன்றி அந்தந்தயுகங்களில் இத்தலத்துக்குண்டாகிய பெயர்கள் அனேகமுண்டு. அவை விரிப்பின் பெருகும்.

இந்தத்தலத்தில் ;—

| | |
|---|---|
| ‡ பிரமேஸ்வரர். | ‡ குமாரேஸ்வரர். |
| அகத்தீஸ்வரர். | இந்திரேஸ்வரர். |
| ‡ விஷ்ணேஸ்வரர். | நாரதேஸ்வரர். |
| சேஷேஸ்வரர். | இராமேஸ்வரர். |

சப்தரிஷீஸ்வரர்.

என்றுசொல்லப்பட்ட ஒன்பது சிவலிங்கங்களும் இப்பெயர்களையே யுடைய ஒன்பது தீர்த்தங்களும்,

¶ நாரதருக்குப்பிரியமானது. † பாவமியில்லாமையே சொரூபமாகவுடைய மோட்சத்தைக்கொடுப்பது. ‡ இக்தச் சிவலிங்கங்களுக்கு இப்போதும் பூசைமுதலிய நடந்துவருகின்றன.

இவையல்லாமல் சிவகங்கை, நந்தியாறு, நந்தி குகை முதலியவைகளு மிருக்கின்றன.

இந்தத்தலத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளின அனுக்கிரகம பெற்ற தேவர்கள், முனிவர்கள், முதலியயாவரும முதலில இந்தத்தலத்தைச சுற்றியிருக்கும இடங்கள ஒன்றில வந்திறங்கி, ஒருதீர்த்தமும, ஒருசிவலிங்கமும, நிர்மாணித்து, ஆராதித்து, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, அவர் அனுமதி பெற்று, பின தணிகைமலையேறி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளை நோக்கித்தவஞ்செய்து பேறுபெற்றனர்; ஆதலால், இந்தத்தலத்தைச் சூழ்ந்த எல்லாதிக்கிலும் காதவழிவரையில் அவர்கள் ஏற்படுத்திய தீர்த்தங்களும் சிவலிங்கங்களும் பல இருக்கின்றன.

இந்தத்தலத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு பிரதிதினம் நாலுகாலபூசையும்; பட்ச, பஞ்சபாவ, பிரதோஷ உற்சவங்களும்; பிரதிமாதம் பரணி, கார்த்திகைதினங்களில் உற்சவங்களும்; உத்திராயண ஆரம்பத்தில் மலைச்சுற்று உற்சவமும்; வசந்தகாலத்தில் ஆற்று உற்சவமும்; ஆடிமாதகிர்த்திகையில் குமாரதீர்த்தத்தில தெப்பல் உற்சவமும்; சித்திரை மாசி இம்மாதங்களில் பிரமோற்சவங்களும் நடந்து வருகின்றன.

## கீழ்திருத்தணிகையி லிருக்கும் வீரட்டகாலேஸ்வரர், ஆறுமுகசுவாமிகள் இவர்கள் வரலாறு.

பூர்வத்தில் கைலையங்கிரியில் பார்வதியும பரமேஸ்வரனும எழுந்தருளி யிருக்கும்போது, பிர்மா விஷ்ணுமுதலிய எல்லாத்தேவர்களும ஸ்ரீ சாம்பவமூர்த்தி தரிசனத்துக்காக அங்குவந்து பரமேஸ்வரனுடையசமீபத்தில் போகும்போது வழிநடுவில் ஸ்கந்தமாதன பர்வதத்தில சிறுபிள்ளைகளோடு திருவிளையாடல் செய்துகொண்டிருந்த குமாரப் பருவமுள்ள ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகளைக் கண்டு, பிரமதேவன ஒருவனதவிர மற்றத் தேவாகளெல்லோரும் அக்குழந்தையை விநயபூர்வமாக வணஙகிச் சென்றனர். பிரமதேவன் பிதாமகனாகிய நான இசசிறுகுழந்தைக்கு ஏன நமஸ்காரஞ் செய்யவேண்டிய தென்னுஞ் செருக்குடன வணங்காமற் சென்றனன. நந்திதேவரனுக்கிரகத்தால் சிவபெருமானைத்தரிசனஞ்செய்து தேவர்கள் திரும்புங்காலையில், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் பிரமதேவனைத் தடுத்தாட்கொள்ள எண்ணங்கொண்டவராகித், தனகிங்கரரால் அப்பிரமதேவனை வரவழைத்து, ஓய் பிரமனே? நீ சகலதேவாகளுக்கும் பிதாமகனாகியும, சர்வசகங்களையுஞ் சிருட்டிப்பவனாயும் இருப்பதன்றி, எல்லாவேதங்களும் உனனிடத்திலிருந்து வந்தமையால் நீபுத்தியிலும் நிபுணனாகவே இருக்கவேண்டும். ஆகையால நீஎனக்குப்பி

ரணவத்தின்பொருளைத் தெரிவி என்று கேட்டமாத்திரத்தில், பிரமதேவன் பிரணவத்துக்குப் பொருள் சொல்ல மாட்டாதவனாகிச் சும்மாயிருந்து விட்டான். அப்போது ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள், கோபமடைந்தவர்போல நடித்து, தன்தோழனாகிய வீரவாகு தேவரைப்பார்த்து, ஓவீரவாகுவே ? இந்தப் பிரமனுக்கு ஆதிகாரணமாகிய பிரணவததின் பொருள் தெரியவில்லை, ஆகையால் இவன்ஜகத்தை சிருஷ்டிசெய்ய பாத்திரவானல்லன். இவனைப்பிடித்துச் சிறைச்சாலையி லடையுமென்று ஆக்கியாபித்தனா. அவவீரவாகுதேவர் அக்கட்டளையின்படி பிரமதேவனைச்சிறையிலிட, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் சேஷாசலமென்றும், திருவேங்கடமலையென்றும், வழங்கும் திருப்பதியினகண் எழுந்தருளித் தாமே அந்தப்பிரமதேவன் செய்துவந்த சகலசிருட்டிகளையும் செய்துவந்தனர். சிலகாலத்துக்குப்பின் தேவர்கள் இந்தச் சவிஸ்தாரத்தைச் சிவபெருமான் சன்னிதானத்தில் விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான், நந்திதேவரையழைத்து திருப்பதியின்கண் வீற்றிருக்கும் தமது குமாரனிடஞ்சென்று முறைமைப்படிவணங்கி, அவரை அழைத்துவரும்படி ஆக்கியாபித்தனர். நந்திதேவர் திருப்பதிக்குவந்து சிவபெருமானுடைய ஆக்கினையை அதிவணக்கத்துடன் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளுக்குத் தெரியப்படுத்தின மாத்திரத்தில், அப்பாலகுமாரனும் சிவசனனிதானத்துக்கெழுந்தருளி வந்து, வந்தனை வழிபாடுகள் செய்து

நிற்க, சிவபெருமான் குழந்தைப்பருவமுள்ள குமாரனைநோக்கி, அப்பா, குழந்தாய்? எல்லோருமமதிக்கத்தகுந்தவனும், சகலதேவர்களுக்குப் பிதாமகனுமாகியபிரமதேவனை, யேன் சிறையில்வைத்தாயென; அக்குமாரன் வணங்கி நான் பிரமதேவனைக காரணமில்லாமல் காராக்கிரகத்தில் அடைத்தவனலலன், பிரணவத்துக்குப் பொருளறியாதவன ஜகத்தைச்சிருஷ்டிசெய்ய எப்படி வல்லவனுவான், அவனுக்குப் பூஜஜியதையேன, என்னுமஅக்காரணத்தால் சிறையிலடைத்து வைததேன.என றுவிண்ணபபஞ் செய்தனா.

இதைக்கேட்ட சிவபெருமான் உள்மகிழ்ச்சியோடு அப்பாகுழந்தாய்? உனககு அந்தப பொருள்தெரியுமா? தெரிந்திருந்தால் எனக்குத்தெரிவியென்று கேட்க, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள பிரணவயதாாத்தம ஏகதேசத்தில் எல்லோருக்கும, எல்லாகாலத்திலும்,சொலலத்தககதல்ல; சிஷியரல்லாத மற்றவாகளுக்கும் அதைச சொல்லததகாது, எனவாயாலஅதைக் கேட்கவேண்டின், நானும தேவரீரும குருசிஷியபாவமாய், அதற்குள்ள முறைமைபபடி யிருநது, காலததையும் இடத்தையும அனுசரித்து கேட்டாலல்லவோ சொல்லபபடு மென்றனா. சிவபெருமான் அத்தியநத சந்தோஷமடைநது குமாரனை ஆலிங்கனஞ்செய்து, குழந்தாய்? நீ சுவாமிநாதனைக் கடவை, ஜகத்துக்கெல்லாம்குருவாய் விடக்கடவை, என்றுசிரவஹித்து, நீசொலவதுகிசந்தான் மாசிமாத

மகாநட்சத்திரம் சமீபித்திருக்கின்றது, அத்தினத்தில நாம் தணிகாசலத்துக்கு வந்து முறைமைபபடிதெரிந்துகொள்வோமென்று திருவாய்மலர்ந்தருளி, இதமானவார்த்தைகளுஞ் சொல்லி பிரமதேவனைச் சிறையிலிருந்து விடும்படி செய்தனர்*

பினபு மேற்குறித்ததினத்தில் சிவபெருமான் சகல சணங்களோடும தணிகாசலதது்க்கு வடகிழககில் வந்திறங்கி, வடமுகமாயிருந்து, ஒருக்ஷணகாலம தவஞ்செய்தனர். அப்போது, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் ஆறுதிருமுகங்களுடன மயில்வாகனரூடராய கிழககுமுகமாகி அவருககிடதுபககத்தில் பிரசன்னராக ; அவரைச சிங்காசனததி லிருத்திச் சிவபெருமான தாழநின்று வந்தனை வழிபாடுகள்செயது பிரணவ ஆர்தத்தை அவாசொல்லக் கேட்டனர். அபபோது சிவபெருமான, எந்தவுயிாகளையும தன்வசமாக்கிக்கெடுக்கும ஆணவமாதி பகையையும, சூரனுதிபகையையும், நாசப்படுததுந்திறமை பிரணவசொரூபரான இந்தவீரனுகிய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியிடங் கண்டேனெனறு வீராவேசத்தினுல் அட்டகாசமசெய்தார். அதனுல் அவருக்கு வீரட்டஹாச ஈஸ்வரரெனறும், அவர்வசித்திருந்த ஊருக்கு வீராட்டஹாசம எனறும் பெயர்வாய்ந்தது. பினபு சகலஜனங்களையும் இரட்சிக்கும்பொருட்டு அவ

---

* தமிழிலிருககும கநதபுராணத்தில சிவபெருமானே ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளிடம்போய் அவருடன்பேசி பிரமதேவனை விடுவித்தனரென்றுசொலலி யிருக்கின்றது.

விடத்திலேயே சிவபெருமான் சடைமுடி தரித்த ஒருசிவலிங்க வுருவமாகவும், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள ஆறு திருமுகவுருவமாகவும, அமைந்து கீழ்த திருத்தணிகையில் திருககோயில்கொண்டு எழுந்தருளி யிருக்கின்றனா. இககோயில்களில் இப்போதும நித்தியபூசைகள் நடந்துவருகின்றன. இவவிடத்தில சிவபெருமான் ஒருகுளம் உணடாக்கி அதைத்தமது சடையிலிருககும் கங்கையினால் நிரப்பினார். இது சிவகங்கையென்னும் பெயருடையதாய் இருந்தது. இதில் முழுகி வீராட்டஹா சேஸ்வரரையும், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளேயும, உள்ளன்போடு தரிசித்தவா, தீராத சகலபிணிகளேயும, தீவினேகளேயும, போக்கிச சத்கதியடைவார். இக்காலத்தில் அக்குளம் தூர்க்கப்பட்டு, அதன்மேல் பயிர்செய்யப்பட்டு வருகினறது. இந்தகோயில்களேச்சுற்றி பூர்வத்தில் ஒருபெரியபட்டணம் மிருந்ததாகக்கேள்வி. இப்போதும அப்படி யிருந்ததற் கடையாளமாகிய குறிகள பலவிருக்கின்றன பின்பு ஓர்காலத்தில் நந்திதேவருக்காக ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் வரவழைத்த நதியிவவிரணடாலயங்களுக்கு மத்தியில் பெருகியோடியது.

---

## ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் இந்தமலேக் கெழுந்தருளியதும,
## பிரமேஸ்வரர் பிரமதீர்த்த வுற்பத்திகளும்.

மேற்சொல்லியபடி சிறையிலிருந்து விடுபட்ட பிரமதேவன் தன்னுலகத்துக்குச் சென்று சிலகாலம்

கழிந்தபின ஜகத்தை சிருட்டிசெய்யும திறமைதனக் கிலலாமையை நினைத்து, மனவருத்தமுற்று, முன னால் தனக்கு அந்தவல்லமையைக் கொடுதத சிவ பெருமானே மறுபடியும் அதைத்தர வல்லவரென் று துணிந்து, அவரைநோககி, அரிய தவஞ்செய்த னன. சிலகாலத்துக்குப்பின் சிவபெருமான பிரசன னமானபோது பிரமதேவன அகமகிழ்சசியோடு அ வரடிபணிந்து, அவரைப்பலவாறுகத தோத்திரஞ் செய்து, சுவாமி? நானசெய்தது பெருந் தப்பிதமா யிருந்தும எனமேல் கருணைவைத்து என்னைச்சிறை யினின்றும் விடுவித்தீர்கள். நான் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளினுடைய மகிமையையறியாமல், அவர்பால னு யிருக்கிறுரென்று அலட்சியஞ் செய்ததற்காக நான பட்டகதிபோதும் ; இப்போது சிருட்டிக்குந் தொழிலை அவரே செய்துவருகின்றுர், அதை முன் போல் எனக்கு அனுக்கிரகிக்க வேண்டுமென்று பி ரார்த்தித்தபோது, சிவபெருமானும கிருபைகூர்ந் து பிரமனே? நமதுகுமாரன் விதித்த சிட்சையை அவனே அனுக்கிரகிகக வேண்டுமாதலால பூலோ கத்தில் காமகோடிபீடமுள்ள சத்திய விஜயக்ஷேத் திரமென்னும் காஞ்சீபுரத்துக்கு வடமேற்கில், தணி காசலமெனறொரு பர்வதமுண்டு, நீ அவ்விடமபோ ய் என்குமாரனை நோக்கித தவமபுரிவாயாகில், அச சண்முகக் கடவுளுடைய கடாட்சததுக்குப் பாததி ரனுவாயென்று ஆக்கியாபித்து மறைந்தனர்.

பின்பு பிரமதேவன் தணிகாசலத்துக்குவந்து அ

ந்தப்பர்வத சிகரத்தினகிழக்கில் ஒருதீர்த்தத்தை யு
ண்டுபணணி அத்தீரத்தக்கரையில் ஓர் சிவலிங்கத்
தைப் பிரதிஷ்டைசெய்து ஆராதித்துக் கொண்டு
பஞ்சாக்கினி மத்தியில்நின்று ஓரோமனதாய் சடாட்
சரத்தைச் செபித்துத் தவஞ்செய்கையில், ஒருநாள்
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் மயிலவாகன ரூடராய
கோடிசூரியப் பிரகாசராய, சகலாபரணபூஷிதராய்,
சகலகணங்களும் பணிவிடைசெய்ய, பிரமதேவருக்
குப் பிரசன்னராகி, ஓய்பிரமதேவனே ? உன்தவத்து
க்கு மகிழ்ந்தோம், உனகோரிக்கையை நிறைவேற்ற
வந்தோம, வேணடிய வரங்களைக்கேளென்று திரு
வாய் மலார்ந்தருளியகாலையில, பிரமதேவன அதைக
கேட்டு சந்தோஷ சாகரத்தில் முழுகினவனுய, மன
முருகி, வேதவாக்கியத்தால் நானுவிதமாகத் துதித்
து, ஓ சுவாமி ? எனமீது கிருபைவைத்து, நான்செ
ய்த அபசாரங்களை மன்னித்து, முனபோலவே சிரு
ட்டித்தொழிலைச செய்யுந்திறம் வாய்க்க வரந்தரவே
ண்டுமென்று பிரார்த்திக்க ; ஸ்ரீ சுப்பிரமணிய சுவா
மிகள் பிரமதேவனுக்குக் * கமண்டலமும். ¶ அட்
சசூத்திரமும் கொடுத்து, சிருட்டிக்குந் திறமை
யும், அனுக்கிரகஞ்செய்து, இன்னும் உனக்கு வே
ண்டிய வரங்களைக்கேள், தருகிறேமெனலும், பிரம
தேவன்பூரித்து, சிரசின்மேல் கைகுவித்து, நமஸ்க
ரித்து,சுவாமி ? தேவரீர் எப்போதும இந்தமலையில்
எழுந்தருளி யிருந்து, பத்தர்க ளெல்லோர்க்கும்

* ஜலபாத்திரம். ¶ ஜபமாலை.

கோரின வரங்களைக்கொடுத்து கொண்டு வரவும ; நான் உண்டுபண்ணின தீர்த்தமும, பிரதிஷ்டை செய்த சிவலிங்கமும, எனபேரால் பிரசித்தமாய்க கொண்டுவரவும் ; வையாசிமாதம் பூரணை விசாகநட்சத்திரத்தோடு கூடிய ஆதிவாரமாகிய இத்தினத்தில் இந்தத்தீர்த்தத்தில் முழுகி, நான பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தைப் பக்தியுடன தொழுபவருக்கு முற்பிறவியிற்செய்த பிரமஹத்தியாதி சகலபாவங்களும நசித்து, என்னுலகத்தை யடையவும் ; நான இன்று தேவரீரைத் தோத்திரம செய்ததை ஓதும் அன்புடையவா சித்தசுத்தராய் ஆசு, மதுரம, சித்திரம், விஸ்தாரம என்னும் நானகுவிதகவிக்கும அதிகாரிகளாய், செல்வம நிறைந்து, பிணிகளொழிந்து முடிவில் தேவரீர உலகையடையவும ; வரமளிக்கவேண்டுமென்று அஞ்சலியஸ்தனாய்ப் போற்றி செய்தனர். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் இவ்வரங்கள்யாவும் அனுக்கிரகஞ்செய்து, அதுமுதல் அந்த மலையில் சகல மனிதர்களுக்கும் தரிசனங் கொடுத்துக்கொண்டு எழுந்தருளி யிருக்கின்றனர். அந்தத் தீர்த்தமும் சிவலிங்கமும் பிரமதேவனால் உண்டுபண்ணப் பட்டதனால் பிரமதீர்த்த மென்றும், பிரமேஸ்வர ரென்றும், பேர்பெற்று பிரசித்த மடைந்து வருகின்றன.

## சரஸ்வதிதீர்த்தம் சரஸ்வதீஸ்வரர்.

பின்பு ஒருகாலத்தில், பிரமதேவன தன்னுல கத்திலிருந்து சூரபத்மன் கொள்ளைகொண்டுபோன வ

ளங்களையெல்லாம மறுபடியும பெறும பொருட்டு தணிகாசலத்துக்கு சரஸ்வதியுடனவந்து தானமுன அத்தலததி லுணடாக்கிய தீாத்தத்தில் இருவருமமூழ்கி சிவலிங்க ஆராதனைசெய்து ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளைநோக்கி அரியதவஞ் செய்தனா. ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகள் அவாகளுக்குப் பிரத்தியட்சமாகி, என்னவரம வேணடுமென்று கேடக, பிரமதேவன் பலமுறை வணங்கித் துதிசெய்து சுவாமி! சூரபதமன என்னுலகததி லிருந்து கொள்ளைகொணடுபோன வளங்களாகிய பிரமாஸ்திரம, பிரமசூததிரம, தண்டம, பிரமசபை, சாகமுதலியவை யெல்லாம் தாங்கள் கொண்டுவநது இந்தமலையில் வைத்திருக்கிறீர்கள் அலலவா, அவறறைக் கொடுப்பது மனறி,எனபேரால் வழங்கிவரும் இநதத்தீர்த்தமும் சிவலிங்கமும் என்மனைவியாகிய சரஸ்வதிபேராலும வழங்கிவரவும ; மார்கழிமாதம் பூரணைதிருவாதிரை நட்சத்திரத்தில் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இந்தச்சிவலிங்கப்பெருமானைததரிசித்து தங்களையு மன்போடு தியானிப்பவருக்கு வேதம்நாலு, வேதாங்கமஆறு, மீமாம்சை, தருக்கம், புராணம், தருமநூல் என்னும் உபாங்கம நாலும், ஆகிய பதினுன்கு கல்விகளும சித்தியாக வரமருள வேண்டுமென்றும பிரார்த்திக்க ; ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அவர்களுக்கு அவ்வரங்களைக்கொடுத்து அந்தர்த்தியானமாயினார். அதுமுதல் அந்தத்தீர்த்தமும், சிவலிங்கமும், சரஸ்வதிபேராலும் வழங்கிவருகின்றன.

## குமாரதீர்த்தம் குமாரேஸ்வரர் உற்பத்தி.

ஓர்காலத்தில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் பரம சிவனிடத்தி லிருக்கும் ஞானசக்தி யெனனும் வேலாயுதத்தைப் பெறவிரும்பிக் கைலாயகிரியி லிருக்கும் சிவகங்கையை ஒருசுனையுருவமாக அங்குவரவழைத்து, தனகோயிலுக்கு வடகிழக்கில தனக்குவழிபடுகடவுளாக ஆபத்சகாயரெனனும் விநாயகரை நிரூபித்து, வழிபாடுபுரிந்து, வடக்கில் சகல இலட்சணங்களுமமைந்த ஒரு சிவலிங்கத்தை அமைத்து, சிவகங்கைத் தீர்த்தத்தால் அபிஷேகம செய்து சகலவித வுபசாரங்களும நடத்திவந்தனர். சிவபெருமான தனகுமாரன செய்யும வழிபாட்டுக்கு அகமகிழ்ந்து உமாதேவியுடன சகல சிவகணங்களும புடைசூழ பிரசன்னராகி, உனகோரிக்கை யென்ன வென்றுகேட்க ; ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அடிபணிந்து, சுவாமி ? தேவர்களை வருத்தும் அசுரர்களை நாசப்படுத்த தேவரீரது ஞானசக்தியைக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, சிவபெருமான் அந்தஞானசத்தியுடன பலவரங்களையும் அனுக்கிரகம் செய்து மறைந்தனர். ஆதலால் குமாரக்கடவுள் வரவழைத்த அத்தீர்த்தமும், பிரதிஷ்டைசெய்த அச சிவலிங்கமும், குமாரதீர்த்த மென்றும், குமாரேஸ்வரரென்றும சொல்லப்படுகின்றன. சிவபெருமான் கொடுத்தருளிய ஞானசத்தியைத் தரித் திருப்பதனால், ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளுக் குரிய பல சிறந்த

திருநாமங்களில ஞானசததி தரரெனபதும் ஓர் திருநாமமாய் வழஙகுகினறது.

பின்பு ஓர் காலத்தில் நாரதமகாமுனிவர் இத்தலத்தில் ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகளிடமவநது வள்ளிநாயகியார ரூபலாவண்ணியஙகளைசசொல்ல, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அந்தத தேவியாரைத் திருமணமபுரிய எண்ணங் கொண்டவராகி, இக்குமாரேஸ்வரரை முறைமைபபடி முனபோல்பூசித்துத் தவமபுரியச் சிவபெருமான பிரசனனராகி, உனக்கெனன வரமவேண்டுமெனறு கேட்க, ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் நாரதமகாமுனிவர் சொல்லிய கன்னிகையைத் தான் மணம்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்க, சிவபெருமான் அப்படியே வரமளித்து அந்தர்த் தியானமாயினர்.

இந்தத்தீர்த்தத்தில் மாசிமாதம் மக நட்சத்திரத்தில், உணமையான பக்தியுடன முழுகிக் குமாரலிங்கத்தைத தொழுபவருக்குச சிவலோகம், எனறுமசொந்தமாம்.

மற்றெந்த தினத்திலாவது பக்தியுடன் இந்தத்தீர்த்ததகில் முழுகினல் குட்டநோய்முதல் தேகத்துக்குண்டாகிய சகலவியாதிகளும, எல்லாப்பழிகளும, பேய், காட்டேரிமுதலிய க்ஷுத்திரதேவதைகள்பயமும், ஏவல்முதலிய பிரயோகங்களும், பஞ்சமாபாதகங்களும், சர்வமனோ துக்கங்களும் நீங்கி, அறிவு, ஆயுள், சுசி, புகழ், கலவித்திறம், வீரம, வலலமை, பொருள், மேம்பாடு, மித்திரர், புத்திரா, மனைவி,

காரியானுகூலம், பகைவரைச் செயங் கொள்ளல், விரும்பிய எவரையும் நட்பாக்கல், அட்டமாசித்தி யடைதல், ஆகியபேறுகளை யடையச்செய்யும்.

இதில் நித்தியம் ஸ்நானம் செய்யில், சகலவித இடையூறுகளும் நீங்கி போக பாக்கியங்களைக் கொடுத்து பின் சத்கதி யடையச்செய்யும்.

இதல் ஸ்நானம் பண்ணினாலும், ஓமம் செய்தாலும், எவ்வகை ஜபம் ஜபித்தாலும், சுஜனங்களுக்கு உபகாரம் செய்தால், எந்தபலனோ அதில் நூறுமடங்கு அதிகமாம்.

இந்த தீர்த்தத்தை உட்கொண்டாலும், தரிசித்தாலும், வழிநடப்பவா வழுக்கி இதில் விழுந்தாலும் பாவங்கள் நசித்து, புண்ணியம்மேலிட்டு, பதவிக ளடையச்செய்யும்.

இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஒருமுறை திலதர்ப்பணஞ் செய்தால், பன்னிரண்டு வருஷத்துக்குப் பிதுர்தேவதைகள் திருப்தியடைவார்.

இந்ததீர்த்தப் பிரபாவத்தை ஒருமுறை சொன்னவரும், சொல்லக் கேட்டவரும், நல்லபலனை அடைவார்

---

சுமார் நாற்பது வருஷங்களுக்குமுன் இந்தத் தீர்த்தத்தின் மேலண்டை கரையை வெட்டியெடுத்து, ஜலத்தை வடியவைத்து, தூர்வாரி, நீராழிமண்டபம் கட்டியபோது தென்பக்கத்தில் ஒரு ஆழமுள்ள பெரியசுனையும், மற்றபக்கங்களில் ஆறுகுட்டைகளும் இருந்தன. இவை ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாமல் தனித்தனியாகி வேறுவேறு நிறமான ஜலத்தை யுடைத்தாயிருந்தன.

தைமாத அமாவாசையில் இந்தத்தீர்த்தத்தில் முழுகி, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளைத தரிசித்தவருக்குச் சந்ததி விருத்தியுண்டாய், பாவங்களெல்லாமநசித்து, சத்கதிகிடைக்கும்.

கிஷ்ணபட்ச சதுர்தசி மஙகளவாரத்தில் உபவாசமிருந்து, அனறு சாயங்காலம் இந்தத் தீாத்தத்தில் முழுகி, மாலைக் கடனகளை முடித்து, ஒரு பசுவைத் தானஞ்செய்பவர் சகல போகபாக்கியங்களை யனுபவித்து தன வமிசத்தாருடன் முக்தியடைவார.

---

## நந்திநதி, நந்திகுகைகளி னுற்பத்தி.

ஓர காலததில், நந்திதேவா, பரமேஸ்வரன சனனிதானத்துக்குப்போய், சிவததுவ இரகசியததைத் தனக்கு உபதேசித் தருள வேண்டுமெனறு பிரார்ததிக்கையில், சிவபெருமான் கருணையுடன நந்திதேவரைப் பாாத்து, ஓ நந்தி? குருபக்தியுள்ள சிஷருக்கே தததுவ உபதேசம் செய்யவேண்டு மலலாமல், பக்தியினருக்கு உபதேசிக்கக் கூடாது, நீ தினந்தோறும் நமமருகிலிருந்து, நம்மைச் சுமந்து வருவதுனுல் நாம் அநதந்தச் சந்தாப்பத்திற் கேற்றபடி உன்னை மெசசிக் கொள்ளுகிறேம. அதனுல் உனக்கு நம்மிடத்தில் அதிகபக்தியில்லை; ஆகையாய் பூலோகத்தில் காஞ்சிபுரத்துக்கு வடகிழக்கில் தணிகாசல மென்றொரு பர்வதமுண்டு, நீ அவிடத்துக்குப்போய், அங்கிருக்கும் திவ்வியதீர்த்தங்களில்

முழுகி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியைக்குறித்து அ த்தியந்த பத்தியுடன மனமுருகித தவஞசெய்வா யாகில், அவர் உனக்குப் பிரசனனராகி, சிவதத்து வங்களையுணர்த்தி, நம்முடைய வுருவமாய், ஐந்து சிகரங்களை யுடையதாய், வில்வமா சயிலமெனறும், கஞ்சமலையென்றும் பெயர்வழங்கும் மலையின் உசசி யில் உள்ளதாயும்,பூரவத்தில் நமமருள் பெறத்தவம் புரிந்த சனத்குமாரா முதலியோர் வந்து படிந்ததா யுமிருக்கும் சைவதத்துவமய தீர்த்தத்தை நதிரூப மாக அவவிடத்துக்கு வரவழைத்து, உன்னை அதி ல் ஸ்நானஞ் செய்யசசொலலி, சிவவாரியில புகுத் தி விடுவாரென்று திருவாய் மலர்ந்தருளினா நநதி தேவரும் ஆக்கியாபித்தபடி தணிகாசலத்துககு வந் து, அவிடததிலிருக்குமட சகல திவவிய தீரத்தங்களி லும் ஸ்நானஞ்செயது, ஓர் குகையில பிரவேசித்து, கிழக்கு முகமாயிருந்து, ஸ்ரீ சுபபிரமணிய சுவாமி யைக்குறித்து நானகு சதுாயுகம வெகு அருமையா னதவம புரிந்து வந்தனா பின்பு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி மயில்வாகனரூடராய்த் தன் தேவிமாருடன அவருக்குப பிரசன்னராகி, அவரைத தமது திருக் கரத்தால் பரிசித்து, வெகுகாலம உடல்வருந்த அ ருமையான தவஞ்செய்தனை, உன்னபீஷ்டத்தைக் கேள், கொடுப்போமெனறு திருவாய் மலாந்தருளிய காலையில், நந்திதேவருங் ஆனந்தபரவசராகி, அஞ் சலியஸ்தராய், பலவிதமாகத் துதிசெய்து, சுவாமி ? சிவதத்து வாமிர்தமென்னும், குளிர்ந்ததீர்த்ததததை

நதிரூபமா யிங்குவரவழைத்து, அதிலென்னை முழு
கச்செய்து, பசுபதிபாசங்களின் தன்மையை யுணர்த்
தி, சிவதத்துவாமிர்தத்தையுபதேசித்து,மயக்கமறு
த்து, தெளிவு பிறக்கச்செய்தருள வேண்டுமென்று
அதிவினயத்துடன் பிரார்த்திக்க, ஸ்ரீ சுப்பிரமணிய
சுவாமி கிருபாகடாட்சராய், சிவபெருமான் நந்திதே
வருக்குச் சொல்லியனுப்பிய வாக்கியத்தைக்கவனித்
து, திருத்திசையாயத் திரும்பி கையைக்காட்டி, சி
வதத்துவாமிர்தத்தை நதியுருவமாக வரக்கடவதெ
ன நினைத்தனர். உடனே அதுவிசேஷ பிரவாகத்து
டனவர * நந்திதேவரைப்பார்த்து, ஓ நந்தி? நீயிந்
நதியில் ஸ்நானஞ் செய்யென்று கட்டளையிட, நந்
திதேவரும் அந்தநதியில் ஸ்நானம் செய்து சித்தசு
த்தரானபின் அவருக்கு சிவதத்துவ ரகசியத்தை ய
னுக்கிரகித்து, மேலும் வேண்டிய வரங்களைக் கே
ளென்ன, நந்திதேவரும் நமஸ்கரித்து, நானமுழுகி
ய சிவதத்துவாமிர்த நதியும், நான் தவஞ்செய்த கு
கையும் என்பெயரால் வழங்கிவரவும்; எனக்குத்
தேவரீர் பிரசன்னமான நாளாகியதை மாதம் பூர
ணைபூச நட்சத்திரத்தில் யாரேனும் உள்ளன்புடன்
இந்தநதியில் முழுகித் தேவரீரைத்தரிசித்தால் அவ
ருக்கு இகத்தில் சகலசம்பத்தும் விருத்தியாய் பரத

* திருவலத்துக்குச் சமீபத்திலிருக்கும் கஞ்சமலையிலுற
பத்தியாய் வந்திருந்த நந்திநதி பிறகாலத்தில் சோளிங்க பு
ரத்தேரிகரை யேறபட்டதால் மறிபட்டு, இப்போது அவ
வேரிக் கலங்கலின் வழியாய் பிரவகிக்கின்றது.

தில் யாவராலும அழிககப்படாத சாயுச்சியப் பிராப்தியடையவும ; மூனறு வருஷகாலம கிருஷணபட்சம சதுர்த்தசியில பக்தியுடன இதில ஸ்நானமசெய்து தேவரீரைத் துதிப்பவா அடியேனபெற்ற பேறெல்லாம பெறவும ; அமாவாசை தினத்தில் இந்த நதியில் மூழ்கி இந்தததலத்திலிருந்து தேவரீரைத தரிசிப்பவா பாவக கூட்டமெல்லா மொழிந்து சதகதியடையவும ; மற்றெந்த நாளிலாவது அனபுடனே இதில ஸ்நானஞ்செய்து தேவரீரைப் பூசிப்பவா எவவகைப் பாவஞ் செயதவாகளாஜலும அவாகளபிறவி ஒழியவும ; நான் தவமபுரிநத குகையில தவஞ்செய்வோருக்கு சாவாபீஷ்டஙகள அதிசீககிரததில் சித்திககவும, வரந்தர வேணடுமெனறு பிராாத்திக்க, ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகள அவவாறே வரமளித்தாா ஆகையால அவை நாதிகுகை யெனறும நந்திநதி யெனறும வழஙகி வருகினறன

---

## அகஸ்தியதீர்த்தம அகஸ்தியேஸ்வரா உற்பத்தி.

ஓாகாலததில பரமேஸ்வரர் பாாவதி சமேதராய ஸ்ரீ கைலாசகிரியை விடடு கங்கைக கரையில் வீற்றுருககும்போது, அவ்விடத்துக்கு அகஸ்திய மகாமுனிவாபோய் பரமேஸ் வரருடைய பாதார விந்தங்ளை நமஸ்கரித்து, சுவாமி? பூலோகத்தில பிராமனா தவிர மற்ற வருணத்தாருககு வேத பாராயண

செய்யும அதிகார மில்லையாகையால், திரவிட பாஷையில சகலவேத, சாஸதிர, புராண, இதிகாசங்க ளடங்கிய பெரிய பிரபந்தஙகளை ஏற்படுததி அவாகளுக்கு பக்தியுண்டாகி பாபநாசனமடைய, உபதேசிககும பொருட்டு எனக்கு சகதி யுண்டுபண்ணவேணடுமென்று பிராாததிககையில்; ஸ்ரீ சாமபமூர்ததி கருணை கூாந்து ஓ அகஸதியனே? பூலோகததில தணிகாசல மெனறோா பாவதமுண்டு, அதில்நவ புண்ணிய தீாததங்களும, நநதி குகையுமிருக்கின்றன. எனக்குக் காசி க்ஷேத்திரம் எப்படி சிறந்ததோ விஷ்ணுவுககு துவாரகை யெபபடி மேனமை யானதோ, அப்படியே ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு தணிகாசலம சிறந்ததாகும். இது ஞானத்தையும் முததியையுங் கொடுக்கததகுந்தது. இதை ஸ்மரித்தால் சகலபாவமும் நாசமாய் விஸ்ராந்தியையடையச்செய்யும்; ஆனதால நீ அவ்விடமபோய் அங்குள்ள திவவிய தீாததஙகளில ஸ்நானமசெயது, நந்தி குகையில ஸ்ரீ சுபபிரமணியரைத் தியானிசுதுத் தவஞ்செயவாயானல், அவா உனக்குப் பிரசனனராகி திரவிடபாஷையை உபதேசிப்பா ரென்று அருளிச்செய்தனா அகஸதியரும சநதோஷ சித்தராய், சகல வைபவங்களுங்கூடிய அப்பர்வதததுக்குப் போய், நந்தி நதியிலமுழுகி, வீராட்டகா சேஸ்வரரைப் பணிந்து, அவா ஆக்கினைப்படி சமீபததி லிருக்கும் ஆதிவராகபுரத்தில ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து, நியமத்துடன் வேதவிதிபபடி சகஸ்தி

ரணமத்தால ஆராதித்து, ஒருவருஷங கழிந்த பின்பு தணிகைமலையேறி கோயிலுககு நிருதி மூலையில ஒரு தீரததத்தை யுணடுபணணி, அதில ஸ்நானம செயது, அதனகரையில ஒருசிவலிங்கத்தைப் பிரதிஷடைசெய்து ஆராதிததுப பினனா நந்திகுகையில் வசித்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைககுறிநது அருமையாகிய தவஞ்செயது வந்தனா. ஒருநாள் அந்தமுனிவருக்கு ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகள் ஈசசிதானநத ரூபராய வள்ளியமமை தெயவயானையமமையென்னும இரணடு தேவிமாருடன மயிலவாகன ரூடராய் சகல பரிவாரத்துடனும பிரசன்னராகி நிற்கையில், அகஸ்திய மகாமுனிவரும கண்குளிரத்தரிசித்து, தேகபரவசராய், ஆனந்தபாஷ்பம பெருக, சாஷடாங்கமாக நமஸ்கரித்து, வேதவாககி யங்களால்பலவாறுகத் துதிததனா. ஸ்ரீ சுபபிரமணியசுவாமிகள் அவரைத தமது திருக்கரததால பரிசித்து, அரியதவஞ்செயது தேகம மெலிநதனை, உனக்கெனன வேண்டியது கேள் என, அகஸ்திய முனிவர் மறுபடியும் வநதனஞ்செய்து சுவாமி? அடியேனுககுதிரவிட பாஷையையும, சைவ தருமங்களையும உபதேசிததருளினால, நான அநதபாஷையில் சகலவேத, சாஸ்திர, புராண, இதிகாசஙகளையும, சைவதருமங்களையும பிரபந்தங்களாக லோகோப காரமாகவுஞ்செய்து சகல சனங்களுக்கும் உபதேசிக்கிறேன் எனறும, இதலலாமல இதற்கருகிலிருக்கும் வராகபுரத்தில் நான பிரதிஷ்டைசெய்து வணங்கிய சிவலி

ங்கத்தை தைமாதம பூசநட்சத்திரத்தில் அனபோடு விதிவழியாக பூசைசெயபவா பாவமநீங்கி, நற்கதியி றசேரவும ; தேவரீா எனக்குக் காடசிகொடுத்த இந் த புரடடாசிமாதம திருவோண நடசத்திரததில், சி ரதததையுடன நான உணடாக்கிய தீாததததில முழு கி தேவரீரைததரிசிபபவா பாவமெல்லாம நசிதது, திருவருளிற கலககவும ; திருவாதிரை நட்சத்திரத் திலும், சோமவாரததிலும, இததீாத்தததில குளித து அனபுடன் தேவரீரைத தரிசிபபவா வினைகளை நீஙகி, சுததாதமராய, எலலாச செல்வங்களையு ம டைநது, மோடச லோகத்தில சேரவும, புரட்ட ாசி மாத அமாவாசையில இந்தததீாததததில் ஸ்நானம செய்பவருக்குப் பாபமொழியவும ; அடியேன துதி தத தோததிரத்தை செபிப்பவா சகலவைபவங்களை யும பெற்று, தேவரீர் திருவடியை யடையவும ; அமாவாசை, பூரணை, துவாதசி, சஙகிரமதினஙகள, அஷடமி, சதுாததசி, சநதிர சூரிய கிரகணங்கள,வி யதிபாதயோகம, அயனஙகள், மாசிமாத சுகில பட சசப்தமி, ஏகாதசி, கிருஷ்ணபட்ச சதுாதசியாகிய சிவராத்திரி ஆகிய இநததினங்களில இந்ததீாத்த த்தில் ஸ்நானம் செய்பவர் சகலலோக சாம்பி ராசசி யங்களையும் பூரணமா யடையவும் ; இவர்கள் பிதுா கள் நித்திய திருத்தியடைந்து மனோசுகமடையவும; இதில் ஒருநாள் ஸ்நானஞ்செய்தாலும் சகல சமபுத் து முண்டாகவும் ; வரந்தர வேணடுமெனறு பிரார் த்திக்க, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அமமுனிவருக்

கு திரவிடபாஷையும், சைவ தருமங்களையும் உபதேசித்து அவற்றோடு பலவரங்களையுங் கொடுத்து அந்தர்த்தியானமாயினார் ஆகையால் அகஸ்தியர் உண்டாக்கிய தீர்த்தமும், சிவலிங்கமும் அவர்பேரால் வழங்கிவருகின்றன அவர் தவஞ்செய்த நந்திகுகையும் அவர்பேரால் வழங்கிவருகின்றது

---

## ஸ்ரீ தெய்வயானையம்மன் திருக்கலியாணமும், இந்திரதீர்த்தம் இந்திரேஸ்வரருற்பத்தியும்

---

சூரபத்மன், தாருகாசூரன், சிங்கமுகாசூரன் முதலிய அசுரர்கள் பரமசிவன் கொடுத்த வரத்தினால் செருக்கடைந்து தேவர்களை மிகவும் வருத்தப்படுத்த, அத்தேவர்கள் சகிக்கமாட்டாதவர்களாய், பிரமதேவனிடத்திலும், மகாவிஷ்ணுவிடத்திலும் தங்குறைகளைச்சொல்லி முறையிட, அவர்கள் குமாரக்கடவுளைவிட வேறுபுகலிடமில்லையெனத் தீர்மானித்து, திருத்தணிகைக்குவந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளைப் பலவாறாக மனங்கசிந்து துதித்தனர். அப்போது அக்குமாரக்கடவுள் திருவுளமிரங்கி, அவர்களுக்குப் பிரசன்னமாகி, அவர்கள் வரவின்காரணம் வினவ, விஷ்ணுமுதலாகிய தேவர்கள் அதிவினயத்துடன் பணிந்து தாருகாசூரன் முதலிய அரக்கர்கள் தபோபலத்தால் பெற்ற வரங்களையும், அவற்றால் தேவர்கள் படுந்து

யரத்தையும் தெரிவித்து, அவர்களைச்சங்கரித்து, த ங்கள் வருத்தங்களை நிவர்த்திக்கவேண்டுமென்று வி ண்ணப்பஞ்செய்தனர். தயாமூர்த்தியாகிய ஸ்ரீசுப்பிர மணியக்கடவுள் அவர்களைக் கிருபாநோக்கத்தால் பா ர்த்து, அவ்விராக்கதரைச் சங்கரிப்போமென்று தி ருவாய்மலர்ந்தருளினார் இதைக்கேட்ட தேவர்கள் மனங்குளிர்ந்து, கண்களினின்றும் நீர் தாரைதாரை யாய்ப்பெருக, பேரானந்த மடைந்தனர். உடனே தேவர், முனிவர், சித்தர், யட்சர்கள், அஷ்டவசு க்கள் முதலிய எல்லோரும் ஒருங்குசேர்ந்து ஸ்ரீ சுப் பிரமணியக்கடவுளுக்கு சேனாதிபதியங் கொடுத்து வெகு ஆடம்பரத்துடனே பட்டாபிஷேகஞ் செய்த னர். பின்பு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் வீரவாகு முதலிய தமது சேனைகளோடும், தேவசைனியங்க ளோடும் கூடிப்போய் அவ்விராக்கதசேனையை எதி ர்த்து, அவர்களெல்லோரையும் எமபுரஞ்சேர்த்து, அவ்விராக்கதர்களையுங்கொன்று, ஜெயப்பிரதத்துட ன சகல தேவர்களோடும் திருச்செந்தூருக்கெழுந்த ருளினார். அக்காலத்தில் தேவேந்திரன் ஸ்ரீ சுப்பிரம ணியசுவாமிகளுடைய புஜபலபராக்கிரமத்தைக்கண் டு மெச்சினவனாகி, அவரனுமதியின்பேரில் தனனு லகத்துக்குச்சென்றுயவ்வனம்,அழகு,சத்குணம், ஆ பரணம் முதலிய எல்லாவிலட்சணங்களும் அமைந் து, தெய்வயானையெனப் பெயர்பெற்ற தன்குமாரத் தியை யழைத்துவந்து, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளு க்கு திருப்பரங்குன்றத்தில திருக்கலியாணஞ் செய்

வித்தனன. ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அவிடத்தி லிருந்து தணிகாசலத்துககு எழுந்தருளினபினபு, தேவேந்திரன் தன்னுலகததிலிருநது சூரபத்மன கொள்ளைகொண்டுபோன வளங்களெல்லாவற்றையு ம் மறுபடி தன்னுலகத்துககுக் கொணடுவர எண ணித் தணிகாசலத்துக்குவநது, தன்கோரிககை யீ டேற ஒரு பிள்ளையாாகோயிலை * பிரதிஷ்டைசெ ய்து, ஆராதித்து, ஒரு தீாததகதை யுணடுபண்ணி அத்தீாத்தக்கரையில ஒரு சிவலிஙகத்தைப பிரதிஷ் டைசெய்து, ஆராதிதது, அரியதவமசெயது வந்தா ர். சிலகாலம் கழிந்தபின தேவேநதிரனுககுப் பர மேஸ்வரன பிரசன்னராகி, அவன எண்ணமறிந்து, மலையின்மீதேறி, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமியிடத்தில வேண்டியவரங்களைப பெற்றுக்கொள் என்று ஆகஞ் ஞாபித்து மறைந்தனர். பிறகு தேவேநதிரன அத்தி ருமலைமேலேறி, கோயிலுக்குததெற்கில் ஒரு தீாத்த த்தையுண்டாக்கி, அதில தெய்வலோகததிலிருந்து வரவழைதத செங்கழுநீர்க்கொடிகளை யுற்பத்திசெ ய்து அப்புட்பங்களால் தான் பிரதிஷ்டைசெய்த வி நாயகரை யர்ச்சித்து, அத்தீர்த்தக்கரையில் ஒரு சிவ லிங்கத்தையுண்டாக்கி, ஆராதித்து, ஸ்ரீ சுப்பிரமணி யரைக்குறித்து அருந்தவஞ்செய்துவந்தனன். கார்த் திகைமாதம் பூரணையுங் கிர்த்திகை நட்சத்திரமுங் கூடிய நாளில், ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் தேவே

* இது தத்காலத்தில செங்கழுநீர்ப்பிள்ளையார்கோயிலெ ன்று வழங்கிவருகின்றது.

ந்திரனுக்குக் காட்சிகொடுத்து, உனக்கு வேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய்மலார்ந்தருளியகாலை யில், தேவேந்திரன அஞ்சலியஸ்தனாய், உள்ளன் போடுதொழுது, துதித்து, சுவாமி? சூரபதுமன் என உலகத்திலிருந்து கொள்ளைகொண்டுபோன கற் பகத்தரு, காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தா மணி, ஐந்திராஸ்திரம், கட்கம, வச்சிரப்படை, சுத னமமென்னும் ஐஸ்வரியந் தருமமணடபம முதலிய வளங்களையெல்லாம் தாங்கள்கொண்டுவந்து இந்தம லையில் சேர்த்திருக்கின்றீர்களல்லவா, அவற்றைக் கொடுக்கவும், நான் ஏற்படுத்திய தீர்த்தத்தில் தின ந்தோறும் காலை, உச்சி, மாலை யென்னும மூன்றுகா லத்திலும் காலத்துக்கொவ்வொரு பூவாக மூனறுபு ட்பங்கள்புட்பிக்கவும், அப்புட்பங்களை அத்திரிகாலங் களிலும்தாஙகள்தரித்துக்கொள்ளவும, இதுமுதல் ச த்துருபயமின்றிச் சொர்க்காதிபத்தியத்தை நான்செ லுத்திவரவும், வரந்தரவேணடுமெனறு விண்ணப்ப ஞ்செய்தனன. ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் அவன்கே ட்ட வளங்களையும், இனனம் சொர்க்கலோகத்திலிரு க்கயோக்கியதையுள்ளதாகிய இம்மலையிலுள்ள எவற் றையும, மற்றவரங்களையுங் கொடுத்து மறைந்தனர். அந்தத்தீர்த்தமும், சிவலிங்கமும், தேவேந்திரன் ஏற் படுத்தியதனால இந்திரதீர்த்தமென்றும, இந்திரேஸ் வரரெனறும் வழங்கிவருகினறன. இந்தத்தீர்த்தத்தி ல் செங்கழுநீர்புட்பம்பூத்துவந்தமையால் இதற்குத் தெலுங்கில கல்ஹாரதீர்த்தமென்றும், தமிழில் செ

ங்கமுநீர்தீர்த்தமென்றும்பெயராயிற்று அதுமுதல் இநதத்தீர்த்ததிஞல ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளு க்கு திருமஞ்சனம செய்யப்பட்டுவருகினறது. இதி ன் ஜலத்தை உள்ளன்புடன தரிசிததாலும, சிரசின் மேல் தெளித்துக்கொணடாலும், உடகொண்டாலு ம் ஏழேழுஜெனமததில்செய்த சகல பாவமும நாச மடைந்து, இஷ்டகாமியம சித்தியாகும். கார்த்திகை மாத பூரணை கிரத்திகையில் இததீரதத்திஞல் ஸ நானம செய்தவருக்குச சித்தசுத்தி, தைரியம, ஞா னம் உண்டாகும். பங்குனி அமாவாசையில் இததீ ர்த்தத்திஞல் ஸ்நானம்செய்து யதாசக்திதானம் நிச பக்தியுடன் செய்பவர்கள் சகல பாவமும் நாசமாகி சத்கதியடைவார்கள.

## சுவாமி சந்நிதியிலிருக்கும் ஐராவதம் திருமபியிருப்பதறகுக்காரணம்.

தேவேநதிரன தானேறும ஐராவதமெனனும் ப ட்டததுயானையை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகளுக்கு ஸ்ரீதனமாகக்கொடுததுவிட்டான ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள்தேவேநதிரனைபபார்த்து பட்டத்துயானை யில்லாமல் உன உலகததுக்கு நீபோஞல், அசுராக ள் அச்சந்தீர்ந்து உனனுடனே போராட வருவாரக ளாகையால், இந்த யானையை உன் உலகததுக்கு அ ழைத்துக்கொண்டு போவெனலும, இநதிரன், சுவா மி? நான கொடுத்துவிட்டபொருளை மறுபடி பெற்

றுக்கொள்வேனுகில் தததாபகாரதோஷம் வந்து சம்பவிக்கு மாகையால இந்த யானையை என் உலகத்துக்கழைத்துக்கொண்டுபோவது தகுதியல்ல, ஆனுல் இந்த யானை இவ்விடததிலிருந்தே என்னுலகத்தை பபாரத்திருக்குமானுல, இது அவ்வுலகத்திலிருப்பதை ஒத்திருககுமென்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் அப்படியே பார்த்திருக்க அவனைவிராவதத்துக்கு உததரவுகொடுத்தனர். அதனுல இபபோது சிலாரூபமாக இருக்கும் ஐராவதம் இநதிரன உலகமிருக்கும கிழககுதிசையை நோக்கி யிருக்கினறது.

---

## விஷ்ணுதீர்த்தம விஷ்ணேஸ்வரர் உற்பத்தி.

---

தாருகாசூரன் படுத்தும்பாட்டைச் சகிககமுடியாத தேவாகள் பிரமதேவனிடம்போய் வணங்கி, சுவாமி ? சிவபெருமான் தாருகாசூரனுக்குச் சகல வரஙகளையுங் கொடுத்தருளினா. அவற்றின வல்லமையால் அவன் எங்களை இரவும் பகலும் வருத்தப்படுததுகிருன், எஙகளால் பொறுக்கமுடியவில்லையென்றுபரிதபிதது விண்ணப்பஞ்செய்தகாலத்தில், பிரமதேவன் ஒன்றுந்தோன்ருதவனுகி, அத்தேவர்களையழைத்துக்கொண்டு மகாவிஷ்ணுவிடஞ்சென்று அவருக்கு வந்தனை வழிபாடுகள்செய்து, தாருகனுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் தெரிவித்தபோது,

மகாவிஷ்ணு கோபாக்கிராந்தராகி, கருடவாகனத்தி னமீதேறி, அவ்வசுரனுடைய பட்டணஞ்சென்று, அவனுடன் அனேகவருஷகாலங்களாகப் போர்புரிந்து, கடைசியில் தன சக்கராயுதத்தை அவனமேல் பிரயோகித்தனர். தாருகாசூரனைச சிரசசேதம் செய்யும்படிவிட்ட சக்கரமானது அவனகழுத்தில் ஒரு ஆபரணமபோலப்போய்த் தங்கிவிட்டது அவவாறுதங்கவே அவன அதைமகாவிஷ்ணு அறியாதபடி தனமாயையால மறைததுவிட்டனன சக்கராயுதம திரும்பிவராமையால மகாவிஷ்ணுநிராயுதபாணியாகி, அச்சூரனுடைய முனேமுகததுநிற்கமாட்டாதவராய்த்திரும்பித்தனனுலகததுக்குபபோயவிட்டனர். தாருகாசூரன் எதிரியறறவனுய்த்தன பட்டணத்துள பிரவேசித்துதனனரணமனேக்குவநது, தனகண்டத்திலிருக்குமசக்கரத்தை தனனுலானமட்டுமபிடுங்கியும், இன்னுமஅனேகராட்சதாளேகொண்டுபிடுஙகிபபாாத்தும், அதுவராமையால்,கண்டபூஷணமாக இருக்கட்டுமெனறு விட்டுவிட்டனன. பிறகு ஸ்ரீசுபபிரமணியசுவாமிதாருகாசூரனேசசஙகரித்தபின்போாக்களத்தைப்பார்வையிட்டுவரும்போது, தாருகாசூரன் கண்டத்தில் விசேஷ சோதியுடனே பிரகாசித்துக் கொண்டிருந்த மகாவிஷ்ணு சக்கரத்தைக்கண்டு, அதையெடுத்துத் தனமாாபில் ஆபரணமாக அணிந்துகொண்டு திருச்செந்தூர்முதலிய ஸ்தலங்களிற் றஙகி பிறகு திருத்தணிகைக் கெழுநதருளினர். இதை மகாவிஷ்ணு அறிந்து அந்தச் சக்கரத்தைப்பெ

றும் பொருட்டுத் திருத்தணிகைக்குவந்து அம்மலை யினமேற் பக்கத்தில் ஒருதீர்த்தத்தை யுண்டுபண் ணி, அதன்கரையில் ஓர்சிவலிங்கத்தைப் பிரதிஷ் டைசெய்து, ஆராதிசுது, அதற் கருகிலிருந்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைக் குறித்துக் கடுமையான தவஞ்செய்து வந்தனர் சிலகாலத்துக்குப்பின் ஸ்ரீசு ப்பிரமணியசுவாமிகள் அவருக்குப் பிரசன்னராகி, நீரேன இப்படிப்பட்ட அகோரதவஞ் செய்கின்றீர்? உமக்கென்ன வேண்டியது? கேளும் என; இதை ம கா விஷ்ணுகேட்டு, பிரதட்சணஞ்செய்து, சாஷ்டா ங்க தண்டன் சமர்ப்பிதது, சுவாமி? எனக்குத் தே வரீருடைய தரிசனத்தைவிட வேறென்ன வேண்டி யது, தாங்களே பரப்பிரம சொரூபம, வேதத்துக் கு அதீதப்பட்டவா, அசுர அந்தகாரததை அதஞ் செய்து, எல்லோரையும் இரட்சிப்பவா, என நாறு விதமாகத் துதித்து, ஓ கருணாநிதி? நான் பூர்வதகி ல் தாருகாசூரனிடத்தில யுத்தஞ்செய்கையில், அவ் வரக்கன் தன்மாயையால் என் சக்கராயுததை அ பகரிதது கொண்டனன; அது இப்போது தங்களு டைய திருமார்பில் ஆபரணமாகப் பிரகாசித்துக் கொண் டிருக்கிறது, எனது சிரேஷ்டமாகிய அச்ச க்கராயுதத்தை எனக்குக்கொடுத்து என்னால் பிர திஷ்டை செய்யப்பட்ட தீர்த்தமும், சிவலிங்கமும், எனபேரால் வழங்கிவர கிருபைசெய்ய வேண்டுமெ ன்று பிரார்த்தித்தனர். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் கிருபாநோக்கத்தால் அந்த சுதரிசன மென்னும் சக்

கராயுதத்தை மகாவிஷ்ணுவுக்குக் கொடுத்து, அவர் இன்னங் கேட்ட வரங்களெல்லாம தந்தருளி அந்த ர்த்தியான மாயினர். ஆகையால் அந்தத்தீர்த்தமும், சிவலிங்கமும், விஷ்ணுதீர்த்தம விஷ்ணேஸ்வர ரொன்று வழங்கி வருகின்றன.

இநதத் தீர்ததத்தில பிரதிதினமும் ஸ்நானம் செய்வோருக்கு ரோகசாந்தி, பாபசாந்தி, பாபநாசனம், புண்ணியவிருததி யுண்டாகும. இந்தத்தீர்த்தத்தை யுண்பவருக்கும ரோக நிவாரதியுணடாகும். இதில் ஸ்நானம்செய்து இதனகரையி லிருக்கும் செங்கழுநீர்ப் பிள்ளையார கோயிலில் செபம செய்வோருககு மநதிரசித்தி, இஷ்டகாமியாாதத சிததி, வெகு சீக்கிரத்தி லுணடாகும். இதில் மாசிமாத வுதயகாலததில் ஸ்நானம்செயது சக்தியானுசாரம் நிஜபக்தியுடன தானம் செய்வோருக்கு சகலசமபத்து முண்டாகி, முடிவில் ஸ்கந்தலோக சித்தியுமுண்டாகும, மகாவிஷ்ணுவுக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் காட்சி கொடுத்தநாளாகிய பங்குனிமாதம் உத்திர நட்சததிரங்கூடிய ஆதிவாரதினததில் இதில் ஸ்நானம செய்பவர் கோரிக்கையீடேறி, மெஞ்ஞான பதவி யடைவார். இதில் அதிகாலையில் அயன ஸ்நானஞ்செயது முழு அன்புடனே தான முதலியவற்றைச செயது பிரதட்சணஞ் செய்பவருக்கு எகசக்கராதிபத்தியமும், தேவேந்திர லோகமும் பிராப்தியாகும. இந்தத் தீர்த்தத்தில் விதிப்படி முழுகி, அனுஷ்டானம் முடித்து, சத்கர்மஞ்செயது, ஸ்ரீ சுப்பிரமணியசுவா

மிகளைத் தரிசித்தவருக்குப் புனர் ஜனனமில்லை. புரு ஷா, ஸ்திரீகள் எந்த சாதியாராலும், எத்தனை வயதுள்ளவரானாலும, இதில் சமயம் வாய்த்தபோது ஒருகாலத்தில் முழுகுவாரானல் அவர்கள் செய்த பாவங்கள் க்ஷணகாலத்தில நாசமாகும். இதில் ஸ்நானம் செய்யாதவர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்குப்பிரிய மில்லாதவராவார அவர்கள் ஜன்மம் விருதாவாகும், பக்திமுக்தி முதலியவற்றை இச்சிப்பவர் இதில் அவசியம் ஸ்நானம்செய்ய வேண்டியது.

## சேஷதீர்த்தம் சேஷேஸ்வரருற்பத்தி.

ஓர்காலத்தில் தேவர்களும், அசுரர்களும், திருப்பாற்கடலைக் கடைய யத்தனித்து, மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும்கொண்டு அக்கடலைக் கடைந்தார்கள். அப்போது வாசுகியும், மந்தரகிரியைச்சுற்றி யிழுக்கப்பட் டதனல் தேகமெல்லாங் காயப்பட்டு, பலஹீனமடைந்து, தன்மீது சயனிக்குஃ, ஸ்ரீமன் நாராயணமூர்த்தி யருகிற்சென்று, நமஸ்கரித்து, சுவாமி ? என்னுடைய தேகமுழுவதும்!காயத்தால் மூடப்பட் டிருப்பதைப்பற்றி நான் பலவீன மானேனுகையால்,இந்தப்பூமியை எப்படி சுமப்பேனென்று பரிதபித்து விண்ணப்பஞ் செய்கையில், ஸ்ரீமன் நாராயணமூர்த்தி கிருபைகூர்ந்து, ஓ வாசுகியே ? இதற்கொரு உபாயஞ் சொல்கிறேன், அதென்னவெனில், பூலோகத்தில் தணிகாசல மெ.

ன்ருெரு பர்வதமுண்டு, நீ அங்கேபோய், சிவபெரு மானைப் பணிந்து, அவரனுமதியினமேல் ஸ்ரீ சுப்பிர மணியசுவாமிகளைப பிரார்த்தித்து வருவாயானல், உன்னுடம்பிலுள்ள காயங்கள்மாறி, மறுபடியும் ப லாஷ்டக னுவாயென்று திருவாய் மலர்ந்தருளினர். வாசுகியும மகாபாக்கியமென்று அப்பர்வதத்தை ய டைந்து, கோயிலுக்கு மேலண்டை ஒருதீர்த்தத் தை யுண்டுபண்ணி, அதன்கரையில் ஸ்ரீமன் நாரா யணமூர்த்தி ஆக்கினைப்படி ஒரு சிவலிங்கத்தைப் பி ரதிஷ்டைசெய்து, ஆராதித்து, அதன்பின் ஸ்ரீ சுப் பிரமணிய சுவாமிகளுக்குப் பூசை, பிரதட்சணம், நமஸ்காரம் முதலியவைசெய்து, அத்தீர்த்தக் கரை யிலிருந்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைக் குறித்து அருமையான தவஞ்செய்து வந்தனன். ஒரு நாள் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அவனுக்குப் பிரசன்ன மாகி, உன்கோரிக்கை யென்னவென்று கேட்க, வா சுகியும் பக்தியுடன் அனேக விதமாகத்துதித்து, சு வாமி ? தேவர்களும், அசுரர்களும், திருப்பாற் கட லைக் கடைந்தபோது, என்னை மந்தரகிரியில் சுற்றி யிழுத்ததனல் நான தேகமுழுவதும் காயப்பட்டு ப லவீன மடைந்தேன், ஆகையால் இந்தப் பூமியைச் சுமக்கச் சக்தியற்றவனு யிருக்கிறேனென்று விண் ணப்பஞ்செய்ய, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் கிருபா நோக்கத்தால் வாசுகியினுடைய தேகத்தைத் திரு நீறு பூசித்தடவினர். வாசுகியும் விபூதி தரிக்கப்பெ ற்ற மகத்துவத்தால் தேகத்திலுள்ள இரணங்களா

றி, முன்னிலும விசேஷ பலமடைந்து, வச்சிரசரீர ஞகி, அப்பரமேஸ்வரனுடைய திருக்குமாரரை நம ஸ்கரித்து, தன்ஞலுண்டாக்கப்பட்ட தீர்த்தமும், சிவலிங்கமும தனபேரால வழங்கிவரவும்; இதில் ஸ்நானஞ்செய்து மெய்யன்புடன இந்த சிவலிங்கத் தைப் பூசிப்பவருக்கு சகலபாவமும நாசமாகி, வயி ற்றுவலி, நயனவியாதி முதலிய சகல ரோகங்களும நீங்கி, தேகபலம, அழகு, செல்வம, புகழ இவற் றைபெற அனுக்கிரகிக்கவும வேண்டினன். அவ ரும அப்படியே வரமளித்து அந்தர்ததியான மாயி ஞர். ஆதலால் அந்தத்தீர்த்தமும், சிவலிங்கமும, வாசுகிபேரால் வழங்கி வருகினறன.

பின்பு ஓர்காலத்தில் ஆதிசேஷன் இந்ததலத்து கருவந்து, இந்தத்தீாத்ததில் ஸ்நானம்செய்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைக்குறித்து அரிய தவஞ்செ ய்து, விசேஷ வரங்களைப்பெற்று போயினன், ஆத தால் இந்தத்தீர்த்ததுக்கும, சிவலிங்கத்துக்கும், சேஷதீர்த்தமென்றும், சேஷேஸ்வரரென்றும் பெ யருண்டாயிற்று. இவையனறி இத்தீர்த்தத்துக்கு நாகசுனையென்றும் பெயருண்டு.

---

## இராமதீர்த்தம் இராமேஸ்வரர் உற்பத்தி.

திரேதாயுகத்தில் ஸ்ரீமன் நாராயணமூர்த்திபூலோ கத்தில் ஸ்ரீராமராயவதரித்து, இராவணன், கும்பக

ானன்முதலிய அரக்கர்களைச் சங்கரித்து, அயோத்தி க்குப்போய், ராஜரீகஞ்செய்து கொண்டு வருங்கால த்தில், முனிவசிஷ்ட ரிடத்திலும், அகஸ்தியரிடத்தி லும், சிவபெருமா னிடத்திலும், தானபெற்ற ஞா னோபதேசம் மோகத்தால் நிஷ்பிரயோசன மாயின தை நினைத்து, அது எப்படி தனக்குக் கைகூடி வரு மென்று சிந்தித்து வருத்தப்படுங் காலத்தில், ஒரு நாள் ஸ்ரீராமருக்கு சிவபெருமான பிரசன்னராகி நீ யேன் சிந்தாக்கிராந்தனாகி யிருக்கிறுயென்றுகேட்க, ஸ்ரீராமர் அச்சிவபிரானைத் துதித்துத் தனகுறைக ளை விண்ணப்பஞ் செய்தனர். அதைக்கேட்டு சிவ பெருமான், ஓ இராமா? தட்சணதேசத்தில் காஞ்சீ புரத்துக்கு வடமேற்கில் தணிகாசலமெனவொரு பா வதமுண்டு, அதில் அனேக திவ்ய தீர்த்தங்களும சி வலிங்கங்களு மிருக்கின்றன. நீ அவிடத்துக்குப்போ ய், ஓர் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து, அதன சமீபத்தில் என்குமாரனாகிய ஸ்ரீ சுப்பிரமணியரைக் குறித்துத் தவஞ்செய்வாயாகில், அவர் உனக்குப் பிர சன்னராகித் தத்துவவுபதேசஞ்செய்வார், அதனால் உன்கவலை ஒழியுமென்று திருவாய் மலர்ந்தருள, ஸ்ரீ ராமர் தணிகா சலத்துக்குவந்து, அவ்விடத்தி லொ ருதீர்த்தத்தை யுண்டுபண்ணி, அதன்கரையில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, ஆராதித்து அங்கு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளைக் குறித்துத்தவ மபுரிந்து வந்தனர். பின்பு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக ள் அவருக்குப் பிரசன்னராகி, அவர்கோரிக்கை யறி

ந்து, தத்துவார்த்தங்களை நன்றாய் விளங்கும்படி யு ணர்த்தி, தன்பட்டணத்துக்குப்போய், இராச்சியபரி பாலனஞ்செய்யவிடைகொடுத் தனுப்பினார். ஸ்ரீராம மூர்த்தியால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தம் இராமதீர்த்த மென்றும், அவர் அர்ச்சித்த சிவலிங்கம் இராமேஸ்வர ரென்றும் பெயர் வழங்கிவருகின்றன.

---

## நாரததீர்த்தம் நாரதேஸ்வரருற்பத்தி.

பூர்வத்தில் ஒருநாள் நாரதமகாமுனிவர் கைலாய கிரிக்குப்போய் பார்வதி பரமேஸ்வரரைத் தரிசித்துத் திரும்புங் காலையில் சிவபெருமான் யானை, குதிரை, தேர், சிவிகைமுதலிய சகலவாகனங்க ளிருக்க ஏனிரிஷப வாகன மேறுகின்றனரென்றும்; வாசனைத்திரவியங்கள் வேண்டியவையிருக்க விபூதியை யேன தரிக்கிறாரென்றும்; நவரத்தின ஆபரணங்களிருக்க இழிவாகிய எலும்பு, தலை, பாம்பு, இறகு, ஓடு, விலங்கின் கொம்புமுதலிய நீசவஸ்துக்களை ஏன் அணிந்து கொள்ளுகிறாரென்றும்; இவ்வாறு சிவபெருமானுடையவாகனம், கலவை, ஆபரணம், உடை, உணவு, படை, சேனை, உருவம், பெயர், செயல், இருப்பிடம், முதலியவற்றின காரணங்களை யோசித்துத் தனக்குத் தெரியாமல் தியங்கி, அச்சந்தேகங்களை நிவர்த்திக்கும் பொருட்டு பிரமலோகம்போய் பிரமதேவனைக் கேட்டனர், அதற்குப்பிரமதேவன் இந்தச் சந்தேகங்களைச் சிவபெருமான், ஸ்ரீ சுப்பிரம

ணியசுவாமிகள் ஆகிய இவ்விருவரி லொருவரே நிவ ர்த்திக்க வேண்டுமே ஒழிய வேறொருவரால ஆகா தெனறும், அதற்குத் தகுதியாகிய ஸ்தலம் தணிகா சலமெனறும் தெரிவித்தனர். பினபு நாரதமகாமு னிவர் பூலோகத்துக்கு, திருத்தணிகைக்கு வடமே ற்கிலுளள ஒருமலையிலிறங்கி, அங்கே ஒருதீர்த்தமு ண்டாக்கி, ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டைசெய்து, பூசி த்து, அரியதவஞ் செய்கையில், சிவபெருமான் நார தருக்குப் பிரசனனராகி, அவர்கருத்தையறிந்து, உன கோரிக்கையைத் தணிகைமலையேறி நிறைவேற்றிக கொளளென் ருக்கியாபித்து அந்தர்த்தியான மாயி னர். அதனபின் நாரதமகாமுனிவர் தணிகாசலமேறி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைக்குறித்து அகோரதவ ம்புரிய ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அவருக்குப் பிர சன்னமாகி, உனக்கென்ன வரம்வேண்டியது, கே ளென, நாரதமகாமுனிவர் எழுந்து, விதிப்படி வந் தனைசெய்து, வேதவாக்கியங்களால் துதித்து, தன சந்தேகங்களை வெளியிட, அவை ஒவ்வொன்றிற்கும் தகுதியான சமாதானங்களைச்சொல்லி மறைந்தனர். நாரதா பூசித்தசிவலிங்கம், நாரதேஸ்வர ரென்றும, அவருண்டாக்கிய தீர்த்தம் நாரததீர்த்த மென்றும் சொல்லப்படும். புரட்டாசிமாதம், அமாவாசைக்கடு த்த நாளாகிய பிரதமை அஸ்தநட்சத்திரத்தில் இந் நத் தீர்த்தத்தில்முழுகி, நாரதேஸ்வரரைத் தரிசித் தவர் வல்வினை யொழித்து, நல்லபேறடைவார்.

## சப்தரிஷிதீர்த்தம் சப்தரிஷீஸ்வரர் உற்பத்தி.

பூர்வத்தில் சனத்குமாரரால் தணிகாசல மென் பது சகலபாவங்களையும போக்கடித்து, சம்சார சாகரத்தைத் தாண்டச்செய்யு மென்று சொல்லக் கேட்ட சப்தரிஷிகள், பூலோகத்தில் சகலபுண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, இந்தத் தலத்து க்குவந்து, இங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு திவ் விய தீர்த்தத்தையுண்டாக்கி, அந்தந்த தீர்த்தக்க ரையில் ஒவ்வோர் சிவலிங்கத்தைப்பிரதிஷ்டைசெய் து, அர்ச்சித்து, சிவப்பிரசாதமபெற்று, பின்பு ஸ்ரீசு ப்பிரமணிய சுவாமிகளைத் தரிசித்து, அவாளவாளுக் கு வேண்டுவன வற்றைப்பெற்றுப் போயினர். அந் த எழுவரும் ஏற்படுத்திய தீர்த்தம் சப்தரிஷி தீர்த் தமென்றும், அவர்கள் ஆராதித்த சிவலிங்கங்கள் ச ப்தரிஷீஸ் வரரென்றுஞ் சொல்லப்படும். இது இப் போது ஏழுசுனையெனப் பிரசித்தியடைந்து, இதில் கனிகைகள் கோயிலிருக்கின்றன.

## கீழ்திருத்தணிகையில் வீற்றிருக்கும் விஜயராகவசுவாமிகள் வரலாறு.

திரேதாயுகத்தில் ஸ்ரீராமர் பிதுர்வாக்கிய பரிபா லனஞ்செய்யச் சீதாபிராட்டி யுடனும் இலட்சுமண

ப பெருமாளுடனும் வனவாசம செய்திருக்கும்போது,பொன்மான் வேடமபூண்டுவந்த மாரீசனைத்தொடர்ந்து ஸ்ரீராமர்செல்ல, அவரைத தேடிக்கொண்டு இலட்சுமணப பெருமாளும்போக, அந்தசமயமபார்தது சன்னியாசி வேடந்தரித்துவந்து, இராவணன சீதாபிராட்டியாரை எடுத்துபபோயினன இதையறிந்த ஸ்ரீராமர் இராட்சத சங்காரஞ்செய்யச சர்வாஸ்திரக்கியானமும, ரௌத்திராஸ்திரமும் பெற வேண்டி சிவாராதனை செய்து, பதினைந்துநாள் அரியதவஞ் செய்யுங்காலையில், சிவபெருமான பிரசன்னராகி, உன்கோரிக்கை யென்னவென்று கேட்க, ஸ்ரீராமர் வந்தனை வழிபாடுகள்செய்து தனதபிப்பிராயத்தை வெளிப்படுத்தினர். அதற்குச சிவபெருமான, நான் உனக்கு உபதேசிக்கக் கர்த்தனல்லன், தண்டகாரணியத்தில தணிகாசல பர்வதத்தில் என் குமாரனுகிய ஸ்ரீ சுப்பிரமணியரிருக்கிறுர், அவருக்குச் சகலசாஸ்திரமு முபதேசிக்க அதிகாரங் கொடுத்திருக்கின்றனம, நீ அவ்விடம்போய், நநதிநதிமுதலிய தீர்த்தஙகளில் முழுகித தவம்புரிவாயாகில் உனகோரிக்கை யீடேறுமென்று மறைந்துபோயினர். பினபு ஸ்ரீராமர் தணிகாசலததுக்குவந்து அங்கிருக்கும திவவிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைக் குறித்துத் தவஞ்செய்தனர். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் பிரசன்னராய், அவர்மனே பீஷ்டமறிந்து,சர்வாஸ்திர கியானத்தையும, ரௌத்திராஸ்திரததையுங் கொடுத்தன ர

யானுகூல மாகும்படி ஆசீர்வதித்து, அயோத்திக்குத் திரும்பிப்போகையில் அவ்விடத்துக்கு வந்து போகும்படி சொல்லினர். அப்படியே ஸ்ரீராமர் இலங்கையில் இராவணாதிகளைச் சங்கரித்துப் புட்பக விமானத்தின்மேல் அயோத்திக்குப் போகும்வழியில் தணிகாசலத்திலிறங்கி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைத்தரிசிக்க, அவர் மலையின்மேல் தன்பக்கத்திலிருக்கச் சொன்னபோது, சுவாமி ? தாங்களெனக்குக் குருவாகையால், நான் தங்களுக்குச் சமானமாயிருக்கலாகாதென்று, கீழ்த்திருத்தணிகையில் நந்தியாற்றங்கரையில், ஒரு திருக்கோயிலில் எழுந்தருளி யிருந்தனர். இவர் இராவணாதிகளை ஜெயங்கொண்டு வந்தமையால் இவருக்கு விஜயராகவ சுவாமியென்று பெயரிட்டு, சிலவேளை அங்கிருக்கச்செய்து பின் அயோத்திக் கனுப்பிவிட்டார்.

இந்த ஐதீகத்தை யனுசரித்து இத்திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் விஜயராகவ சுவாமிகளுக்கும், விஜயவல்லித் தாயாருக்கும் நித்தியபூசைநிவேதனங்களும் நடந்து வருகின்றன.

நந்தியாற்றில் முழுகி விஜயராகவ சுவாமிகளையும், விஜயவல்லித் தாயாரையும், பக்தியுடன் தரிசித்தவருக்கு சகலவித்தையும் பரமபதமும்பிராப்தியாகும்.

## தெய்வயானையம்மன், வள்ளியம்மன் இவர்கள்வரலாறும், வள்ளியம்மையார் திருக்கலியாணமும்.

பூர்வத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு புத்திரிகளாகிய அமி ர்தவல்லி, சுந்தரவல்லி யென்பவர்கள் ஸ்ரீ சுப்பிர மணியசுவாமிகளை மணம்புரியக்கருதி கைலாயத்தி லிருக்கும் சரவணப் பொய்கையில தவஞ்செய் திரு ந்தனா. அவர்களுக்கு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் பிரசன்னராகி, அமிர்தவல்லி ? நீ தேவேந்திரன் புத் திரியாகவும, சுந்தரவல்லி ? நீ ஓர்முனிவா புத்திரி யாகவும், அவதரித்து வளர்ந்துகொண்டிருப்பீர்கள், அக்காலத்தில் நாம் வந்து உங்களை மணம்புரிவோம் என வரமளித்து மறைந்தனா.

அப்படியே அமிர்தவல்லி தேவேந்திரன் புதல்வி யாக உற்பவித்து, நாற்கோடுள்ள வெள்ளையானை வளர்க்க, அக்காரணத்தால், தெய்வயானை யென னும பெயர்பெற்று, திருப்பரங் குன்றமென்னும் ஸ் தலத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளை மணந்து த ன்தவ பீடேறப் பெற்றனள்.

சுந்தரவல்லி தீயைவளர்த்தி அதில்மூழ்கிச் சூட் சும தேகத்துடன் தொண்டைநாட்டில் மேற்பாடிக் குச் சமீபத்திலிருக்கும் மலைச்சாரலில் தவஞ்செய்து கொண்டு சமயத்தை யெதிர்பார்த் திருந்தனள்.

முனபு ஓர்காலத்தில் ஓர்காரணத்தால் சிவவேடந் தரித்து வந்த கண்ணுவமுனிவர் மகாவிஷ்ணுவைத்

பூலோகத்தில் மானிடனுய் அவதரிக்கவும், அவர்பத்தினியாகிய மகாலட்சுமியைப் பெண்மானுகப் பிறக்கவும, உபேந்திரனை வேடர்குலத்தில் உற்பவிக்கவும் சபித்தனர்.

அப்படியே மகாவிஷ்ணு சிவமுனிவரென்னும் ஓாதபசியாய் அவதரித்து, தணிகாசலத் தருகிலிருக்கிறஓா ஆரணியத்தில் தவம்புரிந்து வந்தனா.

மகாலட்சுமியும் மேற்பாடியைச் சுற்றியிருக்கும் வனத்தில் ஒருபெண் மானுயத் தோன்றியிருந்தனள்.

உபேந்திரன் மேற்பாடிக்கருகில ஙவலகிரியில்வேடாகுலத்தில் அவதரித்து வேநம்பி என்னும் பெயர்வகிதது அரசனுக இருந்தான்.

பூாவஜனமத்தில் தனக்குத் தேவியாயிருந்த மகாலட்சுமி, முன்மேற்பாடி வனத்தில் மான்ரூபமாகிச் சஞ்சரிததுக்கொண் டிருந்தவள், ஒருநாள் சிவமுனிவா தவம செய்துகொண்டிருக்கும ஆச்சிரமத்துக்கு சசமீபததிலவா அம்முனிவா (பூர்வமதான்மகாவிஷ்ணுவாதலால்)அம்மானைக கண்டமாத்திரத்தில் மோகஙகொண்டனா. உடனே அந்தமான் கருப்பமாகி, ஒருபெண் குழந்தையையீன்று, அதுதன் ஜாதியாயிராமல், பெண்ணுருவமா யிருந்தமையால் அதைப்பாாத்துப் பயந்து, முனிவர்சமீபத்தில் வள்ளிக்கிழங்கு கிண்டியெடுத்த ஒருகுழியில் அதைவிட்டுப்போய்விட்டது. சூட்சும தேகததுடன அம்மலைச்சாரலில் தவஞ்செய்துகொண்டு, சமயம் பார்த்திருந்தசுந்தரவலலியார் தான், அக்குழந்தை ரூபமாயவத

ரித்தது. தணிகாசலத்துக்கு மேற்கிலிருக்கிற லவல கிரியெனனும் பாவதத்தருகில ஸ்பாடிக நகரமென றுசொல்லப்பட்ட ஓர பட்டணததில இராஜரீகம செய்திருந்த வேநம்பி யெனனும் வேடராசன தன சேனையுடன அவ்வனத்துக்கு வேட்டையாட வநத போது, சிவமுனிவர் ஆச்சிரமததருகில் சிறுகுழந் தை அழுகுரலைக்கேட்டு, அதை எடுத்து வரசசொ ல்லிக் கையில் வாங்கிப்பாாதது, மனமகிழ்ந்து,பூரித் துத தனக்குப பெண்குழந்தை யில்லாமையால் கட வுள இக்குழந்தையைத் தந்தருளினரென்று எண் ணி, தனமாளிகைக்குக் கொண்டுபோய்த தனமனை வியிடங்கொடுத்து, பெரியோர்களால, வள்ளிக் குழி யிலிருநதெடுதத காரணத்தால் வள்ளியமமை யென றுபெயரிட்டு,அத்தியந்த ஆசையுடன் வளாததுவர, இக்கன்னிகைக்கு யுக்தமான வயது வந்தவுடனே, குலாசார விதிபபடி வேநம்பி இராஜன மகளையழை த்து, அமமா ? நீ யிதற்குச சமீபததிலிருக்கிற தினை ப்புனத்தைக் காவல காத்துவா, எனறுசொல்ல,வள ளிநாயகியாரும் உடன்பட்டு, தினைப புனத்துக்குப போய், பரணின்மேலேறி, பட்சி முதலியவைவந்து பயிரைக் கெடுதி செய்யாமல இருக்க ஆயால் ஓட டிக்கொண்டும பாடிக்கொண்டும் இருக்கும நாளி ல், நாரத மகாமுனிவர் அவ்வழியாய் வருகையில் அ வ்வள்ளி நாயகியாரைப்பார்தது, அதிவேகமாய் த ணிகாசலத்துக்குவந்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக ளைநமஸ்கரித்து, சுவாமி ? நான்வருகிறவழியில் இத

ற்குச சமீபத்திலிருக்கிற லவலகிரியில் ஒருசிறு பெ ண்ணைப் பார்ததேன். அககன்னிகையைப்போல் ரூ பலா வண்ணியத்திலும், குணநிசயத்திலும், திரி லோகத்திலும, காணகண்டதிலலே, அந்தக்கன்னிகை யைத தாங்கள் மணமபுரிந்தால் தங்களுக்குத் தகுதி யானவளா யிருப்பாளௌறு விண்ணப்பஞ் செய்து போயினர். பின்பு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் தாம் பூர்வம் சுந்தரவல்லிக்குக் கொடுத்த வாக்கு நிறை வேற்றுங்காலம் சமீபித்ததென்று, சிவபெருமான் அ னுமதிபெற்று, ஒருவேடனபோல் உருக்கொண்டு ல வலகிரிக்குப்போய், வள்ளி நாயகியைககண்டு, மோ கங் கொண்டவர்போல அந்தக்கன்னிகை யுடன் சர சச சொற்களைப் பேசிக்கொண் டிருக்கும்போது, வேடராசன் சேனைகளுடன் அவ்விடம் வந்தான். அ ப்போது ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அப்பரணிற் குச் சமீபததில் ஒருவேங்கைமர மாகிநின்றனர். வே டராசன் வேங்கைமரத்தைப் பார்த்துத் தன்பெண் ணையழைத்து, அம்மா ? இது என்னபுதுமை, இவ் விடததில் ஓா செடியுண்டா யிருக்கிறதென்று கேட் க, அந்தக் கன்னிகையும, ஓ பிதாவே ? எனக்கும் இ து ஆச்சரியமா யிருக்கிறதெனறுசொல்ல ; மற்றவே டாகள் இதை வெட்டி எறிந்து போடவேண்டு மெ ன்று சொன்னார்கள, அதற்கு வேடராசன் அவர்க ளைத்தடுத்து எனக்குப் பெணசந்தான மில்லாதிருந் தபோது ஒருபெண் குழந்தையைக் கடாட்சித்தரு ளிய கடவுள் இபபோது அப்பெண்குழந்தை வெயி

யில் வருத்தப் படுகிறதென்று நிழலுண்டாக்க ஒரு மரத்தை உண்டாக்கினோரென்று ஆனந்தப்பட்டு அதை வெட்டப்படாது என்று தடுத்துத் தான்போக வேண்டிய வேட்டைக்குப் போயினன். உடனேவேங்கை மரமாயிருந்த ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் முன்போல வேடவுருவத்தோடு வள்ளிநாயகிக் கெதிரில்நின்று விரகதாபச் சொற்களைச் சொல்லவும், வள்ளிநாயகியார் மறுத்து மறுமொழி கூறவும், இப்படியிருவரும் வாதாடிக்கொண் டிருக்கையில், வேட்டைக்குப்போன வேடராசன் பரிவாரத்துடன் திரும்புகையில் அவ்விடத்துக்குவர, ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் விருத்தப்பிராமண வேடம்பூண்டு, வேடராச னெதிரிற்போய், ஆசீர்வதித்து, விபூதிகொடுக்க, அதை அன்புடனேவாங்கித் தரித்த வேடராசன், வந்தகாரிய மென்னவென்று கேட்க, விருத்தப்பிராமணன் "* குமரியாடவந்தனம்" என்று சிலேடையாகச் சொல்லலும், உம்மிஷ்டப்படியே தீர்த்தமாடி, இந்தப் பெண்ணுக்குந் துணையாயிருமென்று, அவ்விடத்தில் விட்டுப்போயினன். பின்பு விருத்தப் பிராமண வேடம்பூண்ட ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் வள்ளிநாயகியாரை ஆசீர்வதித்து, விபூதி கொடுத்து, அக்கன்னிகை கொடுத்ததேனுந் தினை

* குமரியென்பது விவாக மாகாதபெண்ணுக்கும் அம்மலையிலுள்ள ஓர் தீர்த்தத்துக்கும் பொருளாம். இத்தீர்த்தத்தில் வள்ளிநாயகியார் மஞ்சளுரைத்துக் குளித்த அடையாளங்கள் இப்போதுங் காணலாம்.

மாவும் உண்டு, தனக்குத் தாகவிடாய் அதிகமாகவி ருக்கிறதாகத் தோற்றுவித்து,தண்ணீர்த் துறையை க்காண்பிக்க வேண்டிக்கொண்டார். அதற்கு வள்ளி நாயகியார் இசைந்து, சமீபத்திலிருக்கும் ஓர் சுனைக் கழைந்து போய்விட, அதில் தண்ணீர் அருந்துவார் போல நடித்து, வள்ளிநாயகியாரைப்பார்த்து, ஓபெ ண்கள் சிகாமணியே? எனதாக விடாய் தீர்த்தனை, அதுபோல என்மோக விடாயும் தீர்த்தருள வேண் டுமென்று இருகையும் கூப்பிச்சொல்ல, வள்ளிநாய கியார் கோபித்துத் திரும்பினாள். அப்போது யானை யைக்கண்டால் வள்ளி நாயகியாருக்குப் பீதியுண்டா மென்றுதெரிந்த ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் பிரண வசொரூபியான விநாயகரைத் துதிக்க, அவர் யானை யுருவாய் வள்ளிநாயகிக்கெதிரில்வந்தனர். அதைப்பா ர்த்த வள்ளிநாயகியார்பயந்து திரும்பினவளாய் ஸ்ரீசு ப்பிரமணிய சுவாமிகளாகிய விருத்தருக்குப் பின்வந் து அடைக்கலமென்று கட்டிக்கொண்டனள். அப் போது அவர் விநாயகரை நமஸ்கரிக்க, அவரும் அந் தர்த் தியானமாயினார். அதன்பின் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளும் தம்முடைய நிஜவுருவத்தைக்காட்டிவ ள்ளிநாயகியாருடன் மனமொத்திருந்தனர். இப்படி ச்சிலகாலம் கழிந்தபின் வேடர்கள் தினைப்புனத்தை யறுத்துவிட, வள்ளிநாயகியார் வெளியேவந்து புன ம்காக்கும் வேலையின்றி, தனியேதனக்காக அமைத்த வீட்டிலேயே யிருந்து, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளை நினைந்துவருந்தி யிருந்தனள். இதையறிந்த ஸ்ரீசுப்பி

ரமணியசுவாமிகள் ஒருநாள் இரவில் வள்ளிநாயகியா ரிருப்பிடஞ்சென்று, அக்கன்னிகையை அழைத்துக் கொண்டு, அவ்வூருக் கருகிலிருக்கும் ஓர்சோலையில், தங்கியிருந்து, வேடராஜனுக்குத் தன்புத்திரியை ஒருவேடன் அழைத்துப் போயினதாகச் சொப்பனரு சாதித்தனர். உடனே வேநம்பி இராசன நித்திரை தெளிந்து தனமாளிகையில் வள்ளிநாயகி யாரைத் தேடிக் காணமல், எங்கெங்குந்தேடி, கால அடிச்சு வட்டின் குறியால் சோலையில் ஒருபுருஷனுடன் கூட இருப்பதுதெரிந்து, தனபரிவாரத்துடன் அங்கு வந்து, அவனும் அவன்பரிவார வீரரும ஸ்ரீ சுப்பிர மணிய சுவாமிகளினபேரில் சரமாரி பொழிந்தனர் அப்போது ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள தமது கொடியாகிய சேவலைநினைக்க, அக்கணமே அது அங்கு வந்து கொக்கரிக்க, அத்தொனியால் அவர்களெல்லோரும் மரணமூர்ச்சை யடைந்தனர். வள்ளிநாயகியார் தனது உறவின்முறையார் பட்டபாட்டைப் பார்த்து சிந்தைகலங்கி, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளடியிற்பணிந்து நானாவிதமாகத் துதித்து, தனநிமித்தம் தன்தகப்பன் முதலியோருக்குவந்த ஆபத்தை நீக்கப் பிரார்த்திக்கையில், தயாசொரூபரான ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கிருபையோடு மடிந்து விழுந்த எல்லோரையும் உயிர்த்தெழும்படிச் சிந்திக்க, அவர்களும் தூங்கியெழுந்தவர்போ லெழுந்தனர் உடனே ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் தம்முடைய நிஜ வுருவத்தைக்காண்பிக்க, வேநம்பி இராசன்முதலாகி

யயாவரும்எல்லேயிலலாத ஆச்சத்தோடும்,ஆனந்தத்தோடும, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைத் துதித்துப் போற்றினர்.

வேசம்பி அரசன் வேண்டுகோளின்படி, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் ஸ்பாடிக நகரத்தில் தனமாளிகைக் கெழுந்தருளித, தன் தாய்தநதையரான பாரவதி பரமேஸவரரை நினைக்க, அவாகள பிரமன், விஷ்ணுமுதலிய சகலதேவாகளுடனும் அவ்விடததுக்கு வந்து, விசுவகாமாவினல விசிததிரமான விவாகமண்டபம நிாணயிதது, அதில் சமஸ்த்தேவா, சித்தர், முனிவா, ரிஷிகள் முதலியோா முனனிலேயில் ஸ்ரீ சுடபிரமணிய சுவாமிகளுக்கும், வள்ளி நாயகியாருக்கும, மாசிமாதம பூசநடசத்திரததில் சகல வைபவத்துடன திருக்கலியாண மகோறசவததைச செய்வி ததனா அபபோது ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் மிகுந்த சந்தோஷத்தோடு தன தேவியுடன் தாய்தந்தையரை நமஸ்கரித்து, எல்லாத்தேவருமபுகழ, அவரவ ரிருபபிடத்துக்குப்போகச செலவுகொடுதது, பார்வதி பரமேஸ்வரரைக் கைலாயத்துக் கெழுந்த ருளசசெயது, தான் வள்ளிநாயகியார் சமேதராய்ப் பத்தாகளுககுக் காட்சியும், வேண்டியவரங்களேயும, கொடுத்து இரட்சிக்கத் தணிகாசலத்துக் கெழுந்தருளி, அங்கு தெய்வயானே அம்மனுக்கும், வள்ளிநாயகியாருக்கும், அவரவர்கள் வரலாறுகளேச்சொல்லி அவ்விருவரும் மனமொத்து ஏகோபித்திருக்க, வள்ளிநாயகியார் வேண்டுகோளின பேரில் தணிகாசலத்

துமகத்துவங்களைத் திருவாய் மலர்ந் தருள்வாராயி னர் அவையாவன:—

## தணிகை மகத்துவம்.

---

தணிகை மலையைத் தரிசிப்பவர் பாவத்தை போக்கடிப்பார்.

இந்த மலையைக்கண்டு கர்வததினுல் வணங்காதவா இதறகுமுன தாஙகளடைநத புணணிய பலனகளை யிழப்பார்.

இந்த மலையைக்கணடு அனபோடு வணஙகுகிறவர், இதற்குமுன தாங்களடைந்த புண்ணியம் கோடியாக அதிகரிக்கும் படியான பலனைபபெறுவா.

கிாத்திகை நாளில் தணிகை மலையைத் தரிசித்தவா,பாவத்தை நாசபபடுத்தி மனோபீஷ்டத்தை அடைவார்.

சிவகங்கை, குமாரதீர்ததம், நந்திநதி, பிரமதீாததம், விஷ்ணுதீர்த்தம், முதலியதீாத்தங்களில் விதிப்படிமுழுகி, வீராட்டகாசேஸ்வரர், ஆபத்சகாயா, குமாரேஸ்வரர் இவர்களுடன என்னையும் தரிசிப்பவா பலவூழ் வினைகளையும் போக்கடித்து, அளவில்லாத புணணியத்தைப் பெற்றுவாழ்வார்.

கார்த்திகைமாதக் கிர்த்திகையில் என்னை இத்தலத்தில் விதிப்படி தரிசிப்பவர் ஏழேழுஜனமம் பிராமணராய், தனுஷ்டியராய், வேதபாரகராகி, சுவாக்கமடைவர்.

அயனங்களில், மாசசங்கிராந்திகளில் என்னை யி த்தலத்தில கிரமப்படி தரிசிப்பவருக்கு சர்வபாவமு மநாசமாகி, சகலபந்தமும விடுபட்டு, சதகதிகிடை க்கும.

பிரயத்தின பூாவமாக இத்தலக்துக்குவந்து இதி ல என்னை அன்போடு துதிப்பவர்க்கும, க்ஷணகால ம பக்தியுடன அரியதவஞ் செய்வோருக்கும், புனா ஜனனமில்லை.

எவ்விதத்திலாவது இந்தத்தலததுககு வந்து எ ன்னை உள்ளனபுடன தரிசிப்பவா சகல விரதபலனு ம், சகல தீாத்தஸ்நான பலனுமடைந்து என்தயவை ப்பூரணமாகப் பெற்று, நல்லபதவியடைவார்.

தணிகைமலைக்குப் போகலாமெனறு அன்போடு மனதில் நினைத்தாலும், இவவூருக்கருகில் வந்தாலு ம, இவவூரைநோக்கிப் பத்தடி நடந்தாலும் கெடுதி செய்யும் நோயெல்லாம் ஒழியும்.

இந்தமலை அடிவாரததில் முழு அன்புடனே ஒரு இரவாவது அல்லது ஒரு முகூர்த்தகாலமாவது வசி பபவர் துஷ்காமங்களைப் போக்கடிப்பார்.

இந்தச் சன்னிதானத்தில் பக்தியுடன ஒரு முகூா த்தகாலம் வசித்தால் துஷ்கர்மசிந்தை நிவாத்தியாய் சனமார்க்க புத்தியுண்டாகும

இந்தத் தலத்திலுள்ள எந்தத்தீர்த்தத்தில் ஸ்நா னஞ் செய்தாலும் எனக்கு அதிகபிரீதியாம்.

இந்தததலததை ஏதாவது ஒருகாலத்தில் தரிசித தாலும், இதராள் உரைக்கக் கேட்டாலும், ஸ்மரித்

தாலும், ஸ்பரிசித்தாலும், பூசித்தாலும்,பலஜன்மங்களில்செய்த பாவங்கள் நாசமாம்.

இந்தச சன்னிதானத்தில் பக்தியுடன் செத்தை, குப்பை, முதலியவற்றைப்போக்கி ; புல்,பூண்டு, முதலியவற்றைக் களைந்து சுத்திசெய்வோரும்: பசுவின் சாணத்தால்மெழுகிச கோலம் போடுவோரும் திருவிளக்கிடுவோரும். பாவவிமோசன மடைந்து, சத்புத்திர, பவுத்திர, போகமுதலிய சம்பத்துகளை பபெறுவார்.

இந்தத்தலத்தில் ஓமாதிகளை விதிப்படி செய்பவர் இகத்தில புத்திர, பவுத்திரபோக முதலியவற்றைய னுபவித்து,தேகாந்தத்தில் ஒருமனு ஆயசுவரையில் சொர்க்க பதவியடைந்து பின் எனனுலகமடைவார்.

இந்தத்தலத்துக்கு உள்ளனபோடு கொடை, சாமரம், முதலியவற்றைத தானம செய்பவருக்கு சகல கோரிக்கைகளும் ஈடேறும்.

இந்தசதலத்தில் புதிதாக ஒருதிருப்பணி செய்வதைப்பாாகிலும் பழையனவற்றை விதியுடன புதுபபித்தல் விசேஷ சிறப்புடைத்தாம.

தோ, யானை, குதிரை, சிவிகை, முதலியவற்றை அன்போடு எனக்குக் கொடுப்பவா அவ்வவவகை வாகனததிலேறி தேவலோகம் போவா்.

வேதம், ஆகமம், கல்வி, இவற்றை யித்தலததில் ஓதுவிப்பவா இஷ்டசித்தியடைந்து, அறிவு, ஆயசு போகம கூடிய செல்வராகி முடிவில மும்மலமும நீஙகப்பெறுவார்.

சோலை, நந்தவனம், தீர்த்தம முதலியவற்றை யித் தலததில் அனபுடன உண்டாக்குவோரும்; தூபம, தீபம, புட்பம் முதலிய கைங்கரியம் செய்வோரும் என் உலகத்தில் வசிபபார்.

விரதம்பூணடு இநதத்தலத்தில் பிராமண சமாராதனை செய்தால பிரமா, விஷ்ணுமுதலிய சகல தேவாகளும் பிரீதியடைவார.

இநதததலததில் விளைந்ததானிய அன்னத்தில் நெய், தேன, பால்கூட்டி மிகுந்த சிரததையுடன் ஒருவன பதினாயிரம, ஐயாயிரம, இரணடாயிரத்தைஞ்ஞூறு ஓமம்செய்து, ஆஹூதிகொடுத்தால் அவன சர்வசித்தைக்கு மதிகாரியாவான்.

விஷ்ணுபக்தி யுடையவருக்கு இந்தத்தலததில் தானங்கொடுத்தால விஷ்ணுவை அத்தியந்தபக்தியுடன பூசித்தால் என்னபலன கிடைக்குமோ அந்தப பலன்கிடைக்கும

இந்ததலததில் யதீபாதயோகத்தில ஒருயோகிக்கு ஏதாகிலும் தானஞ்செய்தால், அதில் உபயோகபபடுததும எள் மேருபாவதத்தளவு எள்தானங் கொடுத்தால என்னபலனோ அநதபலனைக் கொடுதது, தானங் கொடுபபவனைச் சுததாத்துமாவாககி விஷ்ணு சாலோக்கிய பதவி யடையசசெய்யும்.

இநதத் தலத்திலுள்ள தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, இந்த சன்னிதானத்தில் ஆகமத்தில் சொன்னபடியானாலும, அல்லது அவாளவாளுடைய மதசூத்திரப் படியானாலும் ஓமகுண்டத்தை

சாஸ்திரப்படி நிர்மாணித்து, 'மாசிமாதம் திருவாதிரைநாளதொடங்கி நெய்யாலும, சாக்கரையாலும், செய்தபாயசததால் எனக்குப் பிரீதியாய் தினதினம் மூவாயிரம் ஓமம்செய்தால், மும்மலங்களு மொழிந்து, என்பிரசாத மடைந்து, என்சொரூபமாவார்.

அன்புடனே இரண்டு காராமபசுவை எனக்குத் தானங் கொடுப்பவரும, சன்னிதானததில குங்கிலியதூபத்தைக் கொடுப்பவரும், எவவிததுஷ்டரானுலும் சகலபாவங்களிலு மிருந்து விடுபடுவார்.

பக்தியுடன "எனககு பூமிதானஞ் செய்பவா மறுஜனமத்தில் செல்வமிருந்து, வாழ்ந்து, அழகும் சவுக்கியமு முளள தேகததோடு பூமியாளவாராவார்.

இந்தத தலத்தில் மெய்யனபினுல சிரததையுடன அன்னதானஞ் செயபவருக்கு ரோகநிவாத்தி, சாஸ்திரவுணர்ச்சி,புத்திர,பவுத்திர ருறபத்திஉண்டாகும

சிவ நேசாகளுக்கு உபசரணையோடு அனனம், வஸ்திரம், பொருள், ஆபரணம, முதலியவற்றை இந்தத்தலததில் தானம செய்வது இதரதலத்தில செய்வதைவிட சோடிபங் கதிகபலனைத்தரும.

இந்தத்தலத்தில நம்முடைய வுருவம், உங்களுடையவுருவம், நவவீரர் முதலியோருடையவுருவம அமைப்போர், இம்மையில் பிணி, பகையில்லாமல் மிகுந்த செலவமடைந்து, உலகததுக் கதிபராய்வாழ்ந்து, தேவராய், விமானத்தின பேரிலேறி, தேவலோகம், பிரமலோகம், விஷ்ணுலோக மடைந்து, பின் என்னுலக மடைவார்.

ஒரு அதிதிக்கு அனபுடனே இத்தலத்தில் அன ணங் கொடுத்தவா மறுஜன்மத்தில சர்வசாஸ்திர பண்டிதராய் சர்வசம்பத்தும பெறுவார்.

பக்தியுடன் ஒருயதிக்கு இந்தத்தலத்தில அன்னம்,வஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்தவர் சகல சம்பத்து மடைந்து, சாசுவத பதவியடைவார்.

இந்தத்தலததில் புதிதாய்கிடைத்த ஒரு பண்டத்தைத்.தானஞ் செய்பவருக்குச் சகல கோரிக்கை யுமீடேறும.

ஆயிரந்தேங்காய், ஆயிரம வாழைப்பழம், ஆயிரங்கரும்பு,ஆயிரங்கொழுக்கட்டை,ஆயிரம்அதிரசம, ஆயிரமவடை, பிரீதியுடன்வைத்து எனக்குநைவேத்தியஞ் செய்பவர் இகத்தில் நல்லபுத்திர, மித்திர, பவுத்திர, களத்திர பாககியங்களை அடைந்து, ஏக சக்ராதிபதிகளாய் பின்சதகதி யடைவார்.

இந்தத் தலத்தில் ஆயிரந்தீபம் மாலைபோல் ஏற்றி, ஒருபாரம், அரைபாரம், கால்பாரம், அரைக்கால்பாரம, நைவேத்தியம, நெய், பால், சர்க்கரை, தேன், ஒழுகும்படியாய் சகல கறிபதார்த்தங்களுடனநைவேத்தியஞ் செய்பவர் சகல மனோபீஷ்டமு மடைந்து, வமிசததாருடன சாசுவதபதவியடைவார்.

ஆயிரங் கன்னிகாதானம், வெள்ளி ஆபரணம் பூட்டி கோடி சா ஆயகோதானம, கோடியக்கியம இவை செய்யில் எனனபலனோ அந்தபலனைச் சித்தசுத்தியுடன் எனக்கு ஒரு அர்ச்சனை செயதா அதுதரும்.

இந்தத்தலத்தில் பசுவின் நெய்யில் திரிகளைத்துப் பக்தியுடன் விளக்கேற்றினவர் மாயையாகிய இருளைப் போக்கடித்து, அறிஞராய், சாசுவத பதவியடைவார்.

இந்த சந்நிதானத்தில் பக்தியுடன் மூன்று பிரதட்சணஞ் செய்பவர் அடிக்கு அடி அஸ்வமேதபலனும், நூறுயக்கியபலனும், கோடிதனதானபலனும அடைவார்.

பக்தியுடன் எனக்கு யதாசக்தி நைவேத்தியஞ் செய்வோருக்குச் சர்வபாவமும நாசமாய் சதகதி கிடைக்கும.

நல்வழியில் சேகரித்தபொருளால் இந்தத்தலத்தில் கெற்பகுடி, கோபுரம, மணடபம, மதில, சத்திரம், முதலியவற்றைக் கட்டுபவா தீவினையொழித்து எல்லாசெல்வமும பெற்று, என்பிரீதியடைந்து, எனனுலகத்தைச் சேர்வர்.

இந்தச் சந்நிதானத்தில அன்புடனே சங்கீதம பாடி, நடனம் முதலியநடத்தி, என்னைத் தரிசிப்பவர்சர்வலோகத்திலும் சஞ்சரிதது, முடிவில் சாசுவத பதவியடைவார்.

எங்கெந்த விரதங்களை அனுஷ்டித்தாலும, எங்கெந்த நதிகளில் ஸ்நானம் செய்தாலும என்னென்னபலன் கிடைக்குமோ? அந்தந்த பலனை எனபாத தரிசனம் தரும்.

தூரததிலிருந்து தணிகைமலையை தரிசிப்பதனுல் புண்ணியம் மிகுதியாம், அதனிலும ; இந்தத்தல

த்துக்குவந்து வசிப்பது அதிகபலனைத்தரும்; அத னிலும இங்குள்ள திவ்வியதீர்த்தங்களில ஸ்நான ஞ்செய்வது அதிகபலனைத்தரும்; அதனிலும் இங் குள்ள கோயிலுட் பிரவேசித்து பிரதட்சணஞ் செ ய்வது அதிகபலனைத்தரும; அதனிலும் இங்குள்ள எனக்கு வந்தனஞ் செய்வது அதிகபலனைத்தரும்; அதனிலும என்னைத் தோத்திரஞ் செய்வது அதிக பலனைததரும; அதனிலும் என்னைக்குறித்து ஜபம் செய்வது அதிகபலனைத்தரும்; அதனிலும் எனக் குப் பூசை, அபிஷேகம, முதலியவற்றைச்செய்வது அதிகபலனைத்தரும்; அதனிலும் என்னைத் தியானி ப்பது அதிகபலனைத்தரும்; அதனிலும் பொருமை முதலிய துர்க்குணங்களை நியமமாய் இங்கிருந்து வி டுவது அதிகபலனைத்தரும்.

இந்தத்தலத்தில் சத்விஷயமாகத் தேடியபொரு ளால எந்தெந்த தானஞ்செய்தாலும், அது கோடி கோடியாக விருத்தியாகும்; எந்தெந்த பாவங்கள செய்தாலும், அதுவும் அபபடியே கோடிகோடியா கும இதற்குச் சந்தேகமில்லை, யானதால், எந்தப்பி ரயத்தினப் பட்டாவது இந்தத்தலத்தில் சதகர்மம் செய்யவேண்டியது.

உள்ளன்போடு தணிகைமலையென்று ஒருதரமு ரைத்தாலும், ஸ்மரித்தாலும் மனோதைரிய முண் டாய் பாபநாசனமாகும்.

இந்தத்தலத்தில்என்திருநாமத்தைஅன்புடனொரு தரம்ஸ்மரிப்பதுபவசாகரம்தாண்டஒருஓடமாகும்

இந்தத்தலத்தில் என்னைத் தோத்திரஞ் செய்பவர் சந்ததிமுதலிய விருத்தியடைந்து, சகலசுபமும் பெற்று, பூமியில் முனீஸ்வரராவார்.

சதிபுருஷர் இருவரும் நான்கு சுக்கிரவாரங்களில் உபவாசமிருந்து இந்தத்தலத்திலுள்ள விஷ்ணு தீர்த்தத்திலாவது, குமாரதீர்த்தத்திலாவது, பிரமதீர்த்தத்திலாவது ஸ்நானஞ்செய்து, என்னைத் தரிசிப்பாரானால் மலட்டுத்தன்மை நீங்கி சுபுத்திரவான்களாவார்.

இந்தத்தலத்தில் தவஞ்செய்தால் சித்த விஸ்ராந்தி உடனே உண்டாகும்.

இந்த சந்நிதியில் அந்தக்கரண சுத்தியோடு சடாட்சரத்தைச் செபிப்பவர் அந்தியகாலத்தில் என்னையடைவார்.

ஜிதேந்திரியராகி இந்தத்தலத்தில் என்னை ஐந்து நாள் தியானிப்பவர் தமதுகோரிக்கை யீடேறப்பெற்று மோட்ச சாயுச்சிய மடைவார்.

இவ்விடத்தில் மனத்துறவடைந்து சந்நியாசி யாகிறவர் சமஸ்தபந்தமும் போக்கடித்து அதிசீக்கிரத்தில் ஜீவன்முக்தராவார்.

உயிர்விடுங் காலத்தில் எனதிருநாமங்களில்எதையாவது அன்போடு ஒருதரமுரைத்தால் பாவக்கூட்டமுழுவதும் பாழாகி, சுத்தாத்மாவா யாக்கிவிடும்.

இந்தத்தலத்தில் என்னை விதிபூர்வமாக வித்தியாரூபராகவும், சதுர்புஜங்கள் கூடினவராகவும் பாவித்துத்துதிப்பவர் சர்வவித்தைக்கும், அதிகாரியாவர்.

இந்தத்தலத்தில என்னைத் திருவருளின உருவா கபபாவித்து, ஒருதிருமுகமும இரண்டு திருக்கரங் களு முடைத்தாகி, ஒருகையை யிடையிலவைத்து மற்றொருகையில் வேலாயுதத்தைத தாங்கி, அருளா கனிந்தொழுகும கடைக்கண்களையும் பரந்த முக த்தையுமுடைய ஞானசத்திதரராக மன வுருக்கத தோடு தியானிப்பவா என் உருவமடைவார.

உத்தமமாகிய இந்தத்தலத்து மகத்துவத்தைச் சி ரத்தையுடன படிப்பவரும, கேட்பவரும, சமுசார துக்கத்தி லிருந்துநீங்கி, பாவங்களைப் போக்கடித்து இஷடசித்தி யடைந்து, சத்குணமவாய்ந்து, எல லாத் தேவர்களுடைய பிரீதியுமபெறுவார. இதை யிந்தத்தலத்தில படிக்கினும, கேட்கினும, சிறநத தாகும், அதிலும கிருத்திகைநாளிலாகில் விசேஷப லனைக் கொடுக்கும.

நாயிற்றுக்கிழமையில் * விஷ்ணுதீர்த்தத்திலும் ; திங்கட்கிழமையில் ¶ சிவகங்கை, † நந்திநதி, யிவ விரண்டிலும் ; செவ்வாய்க்கிழமையில் ‡ நாரததீர்த் தம், § சேஷதீர்த்தம், இவ்விரண்டிலும் ; புதன் கி

---

* சுவாமி கோயிலுக்கு மேறகே பிராமமண அக்கிரா ரத்து நடுவிலிருக்கின்றது.

¶ இதினிருப்பிடஞ சரியாய்த் தெரியவில்லை.

† கீழ திருத்தணிகைக்குக் கிழக்கிலிருக்கின்றது.

‡ இதினிருப்பிடக் தெரியவில்லை.

§ விஷ்ணு தீர்த்தத்திலிருந்து மேல் திருத்தணிகைக்குப் போகும்வழியின் வடக்கில் நந்திகுகையும் தெற்கில் சேஷ தீர்த்தமு மிருக்கின்றன.

ழமையில் + பிரமதீர்த்தத்திலும்; வியாழக்கிழமை யில் * செங்கழுநீர் தீர்த்தத்திலும்; வெள்ளிக்கிழமையில் ¶ குமாரதீர்த்தம், § ஏழுசுனை, இவவிரண்டிலும்; சனிக்கிழமையில் அகஸ்தியதீர்த்தத்திலும்; = ஸ்நானஞ்செய்தால் மிகுதியாகிய பலனைத்தரும். ஆனபோதிலும் எந்தவாரத்திலாவது, எந்த தீர்த்தத்திலாவது விதிப்படி முழுகி என்னைபக்தியுடன் தரிசித்தால் தீவினைகளொழிந்து சகலபேறுகளையுங் கொடுக்கும்

இவ்வாறு திருத்தணிகையின் மான்மியத்தில் சிலவற்றை உலகோர் கடைத்தேறும் பொருட்டு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் திருவாய்மலர்ந் தருள இரண்டுதேவிமாரும் கேட்டு பரமானந்த மடைந்தனர்.

---

## ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக் கடியார் அனுஷ்டிக்கவேண்டிய விரதங்கள்.

---

வாரங்கள் ஏழனுள் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகளுக்குப் பிரீதியானநாள் வெள்ளிக்கிழமையாம. முன

---

+ குமாரதீர்த்தத்திலிருந்து சுவாமிகோயிலுக்குப் போகும்வழி நடுவின் வடக்கிலிருக்கின்றது.

* சுவாமி கோயிலுக்குத் தெற்கிலிருக்கின்றது.

¶ மலைக்குக்கிழக்கு அடிவாரத்தி லிருக்கின்றது.

§ பின்னுக்கு மலையின கிழக்குக் கோடிக்குத் தெற்கிலிருக்கின்றது.

= இதிளிருப்பிடம் சரியாய்த் தெரியவில்லை.

னோர் இந்தத்தினத்தில் விரதம் அனுஷ்டித்து மன திலே நினைத்த எண்ணங்களையெல்லாம் வெகு சீக்கிர த்தில் நிறைவேற்றிக் கொண்டனர்

இத்தினமுழுவதும ஆகாரநித்திரைகளை நிவர்த் தித்து முன்னாளும, பின்னாளும், பகலில் மாத்திரம அன்னம் உண்டு,பக்தியுடன் சத்காலக்ஷேபம செய திருக்கவேண்டியது.

தனதிராச்சியத்தைப் போககடித்து மனைவி யுட னும, புததிரனுடனும, வனவாசமபோன பகீரத மகாரசன் இந்தவிரதத்தை மூன்று வருஷகாலம் அ னுஷ்டித்து குமாரக்கடவு ளனுக்கிரகததால் மறுப டியும தன்னரசாட்சியைப்பெறறு, இன்னும் தான மனதிலெண்ணிய கோரிக்கைகள் யாவும் நிறைவே ற்றிக்கொண்டனன.

பரணிநாள் பினநேரத்தில் ஒருபோ துணவுகொ ண்டு, கார்த்திகைநா ளுதயத்தில் உடைகட்டி நல்ல தீரததததில முழுகி, சுத்தவஸ்திரம் தரித்து, நித்தி யகடனை முடித்து, ஐம்புலன்வழியில மனதைச்செ லுத்தாதவனுகி, தனதுகுருவின பாத கமலங்களைச் சிரசினமீதுவகித்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைத் தியானித்து, அன்புடனே புராண காலக்ஷேபஞ்செ ய்து, மூன்றுகைஜலம் சாப்பிட்டு, ஸ்திரீகளை யம னெனப்பாவித்து, தருப்பா சயனத்தின்மேலிருந்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளைச் சதாதியானித்து, ம றுநாளாகிய உரோகணி நாளுதயத்தில் நித்திய கட னைமுடித்து, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு வந்த

னை வழிபாடுகளசெய்து, அவா அனபாகளுடன பா ரணைசெய்து, அனறு அஸ்தமிக்கும் காலமவரையி ல் உறங்காதிருக்கவேண்டும இப்படி பனனிரணடு வருஷகாலம விரதமிருந்து, நாரதமகாமுனிவா சத தரிஷிகளுள சிறந்தவராயினா ஒருபிராமணன இவ விரததததை யனுஷ்டித்து, முதலமனுவாகி, உலகத் தையாணடுவந்தான. மற்றொருபிராமணன இவவிர தத்தைநோற்று, தனனபீஷ்டமடைந்து,திரிசஙகும காராஜனு யவதரிததான. ஒருமனனவனும, ஒருவே டனும, இவ்விரததததை யனுசரிதது, அந்திமான, சந்திமான் என்னும இடையேழு வளளலில இருவ ராயவதரித்தார். இபபடி இவவிரததததைப் பூண்டு, திரிபுவனததிலும, வேண்டியவற்றை யடைந்தவா அனேகருளா.

ஐப்பிசிமாசம், சுக்கிலபட்ச முதலாறுநாளில, பி ரதிதினம் காலையில ஸ்நானஞ்செயது, சுதத வஸ்தி ரந்தரித்து, நித்திய கடன்களைமுடிதது, ஸ்ரீ சுபபிர மணிய சுவாமிகளை முறையுடனபூசிதது, வெல்லங கூட்டி நெய்யினல் சமைக்கப்பட்ட அப்ப வாக்கங் களைநிவேதிதது,இன்னும் விதித்தன வற்றைச்செய் து, அவர் திருப்புகழைப்படித்து ; அல்லதுகேட்டு, கொஞ்சம் நீா அருந்தி உபவாச மிருக்க வேண்டிய து ; இட்படி ஆறுநாளிருந்து ஏழாம்நாள் ஸ்ரீசுப்பிர மணிய சுவாமிகளுக்கு சிறப்பாக பூசைசெய்து விதி ப்படி பாரணைசெய்யவேண்டியது ; இவ்விரதத்தை அனுசரித்து தேவர்களும், முனிவர்களும், அசுரர்

பயத்தைநீக்கி சலனமில்லாத மனதுடையாரானார்; முசுகுந்த சக்கரவாத்தி இவ்விரதத்தை யனுஷ்டித்து உலகமெல்லாம ஒருகுடைக்கீழ் ஆண்டு தேவலோகத்துக்குப்போய் தேவேந்திரன் பகைவர்களை சசெயிதது அவனரசை நிலைநிறுத்தினன.

## ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளின் ஸ்தானம, உருவம், ஆயுதமுதலியவற்றின் இரகசியார்த்தம்.

" ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளின் ஸ்தானம். "

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் எழுந்தருளி யிருக்கும், " திருத்தணிகைமலை " யென்னப்படுவது சூராதிஅரக்கராகிய ஆணவம், மாயை, காமியம், எனனுமமும்மலங்களையும, வேடராகிய சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றமெனனும் ஐமபுலன்களையும் ஒழிததுத் தணிந்து நினற இடமாகிய " லலாடஸ்தானமாம"

## அவர் திருவுருவம்

ஸ்ரீ சுபபிரமணிய சுவாமிகளுக்கு முற்றறிவு, எல்லையில்லாத இன்பம, இயற்கையறிவு, பேரருளுடைமை, வரமபிலாவாற்றல, தமவயமுடைமை ஆகிய ஆறு சுத்தகுணங்களும், ஆறு திருமுகங்களாகவும், மற்றக் கலியாணகுணங்கள் ஏனைய அவயவங்களாக

வும்அமையப் பெற்றிருக்கும அருட்கோலமே திரு மேனியாம்.

இதனுல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுடைய திருவுருவம் பஞ்சபூதங்களாலாகிய ஸ்தூல, சூட்சுமமுதலிய பௌதிகதேக மல்லவென்பது பெற்றும். ஆனதால் தேகங்களுக் குரிமையாகிய குணதோஷங்கள், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுககுச் சற்றேனுமில்லை யென்பது துணிபு.

## அவர் ஆயுதம், கொடி, வாகனம், படை.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு தோமரம், கொடி, வாள், குலிசம, அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு,வேல் ஆகிய இப்பனிரண்டும் பன்னிருகை ஆயுதங்களாம். இப்பன்னிரண்டில் வேலாயுதந்தவிர மற்றப் பதினோராயுதங்களும, பதினொரு உருத்திரர்களாகும் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி எனனும் மூனறுசக்திகளும, மூன்றிதழாயமைந்த அடுக்கே வேலாயுதமாம்.

இதனுல் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகளுடைய ஆயுதங்கள், கொல்லன்முதலிய தொழிலாளிகளால் செய்யப்பட்டு, உயிரைவதைத்து, நிணந்தோய்ந்து, உதிரத்தைக் குடிக்கும் ஆயுதங்கள் போலலல வெனபதாயிற்று.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்குக் கொடியாகிய கோழிநாத தத்துவமாம்; அவர்வாகனமாகிய மயில்

விந்து தத்துவமாம்; அவர்படையாகிய பூதகணங்க ள் தத்துவக் கூட்டங்களாம்.

## அவர் மனைவிமார்.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு தெய்வயானை யம்மை, வள்ளியம்மை என்னும் இரண்டு தேவிகளு ம்முறையே ஞானசக்தியும், கிரியாசத்தியுமாவார். சிலர் வேலாயுதத்தை ஞானசத்தி யெனறும், வள்ளி யம்மையை இச்சாசத்தியென்றும், தெய்வயானையம் மையைக் கிரியாசத்தி யென்றும் சொல்கின்றனர். வேறுசிலர் வேலாயுதத்தை முன்சொன்னபடி இச்சா, ஞான, கிரியாசத்திகளி னடுக்கென்றும்; தெய்வயானையம்மை, வள்ளியமமை இவர்களை முறையே சிற்சத்தி, பராசத்திகளென்றுஞ் சொல்கின்றனர்.

ஆகையால் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு தேவிமாரென்பவர் காமோற்பததிகரு ஏதுவாய்ச் சிற்றினப அனுபவத்தை விளைவிக்கும் உலகத்து மனைவிமாரபோல் ஆகாரென்பது துணிந்தபொருள்.

* ஆன்மாக்களுக்கு மோட்ச இன்பங் கொடுக்க விரும்பும விருப்பம, "இச்சாசக்தி," அதற்கு வேண்டியவைகளை அறியும் அறிவே "ஞானசக்தி," அறிந்தவைகளைச் செய்யும் செயலே "கிரியாசக்தி," உயிர்க்கொளியாய் நிற்பது, "சிற்சக்தி," பிராணன முதலிய வாயுவாக நிற்பது "பராசக்தி."

## அவர் செய்கை,

சூரபத்மன், சிங்கமுகாசூரன், தாருகாசூரன் எனனும் மூன்று அசுரர்களை முறையே ஆணவம்,மாயை, காமியம், ஆகிய மும்மலங்க ளென்றும்; அவவசுரர்களால் பந்திக்கப்பட்ட தேவர்களை ஆனமாக்களென்றும் மேலோர் சொல்கினறனர். ஆதலால் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் அசுராகளையழிததது தேவர்களை யிரட்சித்தனரென்பது ஆணவமுதலிய மலங்களையறுத்து ஆன்மாக்களை ஆட்கொண்டனரென்பது பாரமார்த்திகபாவமாம்.

வேடர்களென்பது, ஐம்புலன்களாம்; அவரிடையில்வளர்ந்த வள்ளிநாயகியார் ஜீவாத்துமாவாம தனையும் தனக்காதாரத் தலைவனையும அறியாமல் வளாந்த ஜீவாத்துமாவாகிய வள்ளிநாயகியாரை, ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகள் ஐம்புலவேடர்களின மயக்கமறுத்துத் தனக்கடிமை கொணடன ரென்பது பெற்றும்.

## திருத்தணிகைத் தலபுராணம்

சம்பூரணம்.